உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்" — திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] யுவ ஹுஸ் வைகாசிமீ [பகுதி-எ.
Vol. XXXII. *May-June 1935.* No. 7.

உள்ளுறை.

வெள்ளிவிழாக் கொண்டாட்டம், ராஜவிசுவாசம், மங்களவாழ்த்து, கமலபந்தவாழ்த்து, அரசவாழ்த்து:-		பக். I–VIII
நியாயப்பிரவேச மணிமேகலை:—	பத்திராசிரியர்	௧அ௧–௧௯௪
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	௧௯௫–௧௯அ
பரிசோதனத்தொடர்:—	,, T. N. அப்பனையங்கார்	௧௯௯–௨0௨
மதிப்புரை:—		௨0௩–௨0௪
கலைசைக்கோவை முகவுரையும் சுப்பிரமணிய முனிவர் வரலாறும்:—	,, மஹாமஹோபாத்யாய திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர்	I–VIII
பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி:	,, மு. இராகவையங்கார்	15–22
குருகைமான்மியம்:-	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.	313–320

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1935.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVERGAL and published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

ஸ்ரீ:

சேந்தமிழநுபந்தம்.

வெள்ளிவிழாக் கொண்டாட்டம்.

மாட்சிமைதங்கிய நம் மன்னர் பெருமான் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் ஆட்சியெய்தி இருபத்தைந்தாண்டு நிறைந்த நன்னாள் வெள்ளிவிழா, நிகழும் மேமீ 6உ திங்கட்கிழமை மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சங்கமாளிகை வெள்ளிவிழாவின்பொருட்டு மாலை தோரணம் கொடிகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. மாலை 5 மணிக்கு விழாக்கொண்டாட்டம் தொடங்கியது. பண்டிதர்களும் உயர்தர நீதிமன்ற வழக்கியலறிஞர்களும் பிறரும் குழுமியிருந்தனர். சங்கத்தார் வேண்டிக்கொள்ள மதுரை இன்கம்டாக்ஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் மகா-ா-ா-ஸ்ரீ R. ராஜகோபாலையரவர்கள் அக்ராஸநம் வகித்தார்கள். தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர் இராமலிங்கம் என்பவரால் கடவுள்வாழ்த்துப் பாடப்பட்டது. செந்தமிழுதவிப்பத்திராசிரியர் T. K. இராமாநுஜையங்கார் *ராஜவிசுவாசம் என்பதுபற்றி உபந்யஸித்துத் தாம்இயற்றிய *வாழ்த்துப்பாடலையும் படித்தார். மகா-ா-ா-ஸ்ரீ K. R. வேங்கடராமையர் B.A., B.L., M.L.C. அவர்களும், K. இராமையங்கார் B.A., B.L. அவர்களும், யாழ்ப்பாணத்துத் தமிழ்த்தொண்டன் பத்திராசிரியர் V. M. கனகசுந்தரம் அவர்களும், ராவ்ஸாஹிப் R. நரசிம்மையங்காரவர்களும், மதுரை தபால் இலாகா சூபரிண்டெண்டெண்ட் R. சந்தானம் ஐயங்காரவர்களும், மதுரையிலுள்ள இராமேசுவரதேவஸ்தானபாடசாலைத் தலைமைத் தமிழாசிரியர் T. N. அப்பனையங்காரவர்களும் ராஜவிசுவாசம் என்ற விஷயத்தை ஒட்டிப்பேசினார்கள். அக்ராஸநரவர்கள் முடிப்புரையுடன் வாழ்த்துக் கூறினார்கள். சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்கள் அக்ராஸநர் முதலியோர்க்கு வந்தனோபசாரங்கூறிச் சந்தன தாம்பூலாதிகள் வழங்கக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

சுபம். சுபம்.

---

* இவ்வுபந்யாசத்தின் சுருக்கமும் வாழ்த்துப்பாடலும் அடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ:

ராஜ விசுவாசம்.

ராஜவிசுவாசமாவது அரசனிடத்துக் குடிகள் அன்பும் ஆதரவும் கொண்டு ஒழுகுவதாம்.

வடமொழியில் ராஜா என்னும் சொல், 'குடிகளைச் சந்தோஷிக்கச்செய்பவன்' என்னும் பொருளிலும், 'ஒளியுடையவன்' என்னும் பொருளிலும் வழங்குமென்பர்.

தென்மொழியிலும் ஒளியுடையவன் என்னும் பொருள்பற்றிக்,

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி' (திருக்குறள்–௩௯0)

எனத் தெய்வப்புலவர் கூறியுள்ளார்.

'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்' (௬௯௮)

என்னும் குறளிலும் இக்கருத்துப் பயின்றுள்ளது.

அங்குப் பரிமேலழகர், 'ஒளியாவது: தாம் உறங்காநிற்கவும் உலகங்காக்கும் அவர் கடவுட்டன்மை' என இதனை நன்கு விளக்கியுள்ளார்.

'உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்'

(நாமகளிலம்பகம்—உ௧௯)

என்னும் சிந்தாமணியும் இதனை வலியுறுத்தும்.

அரசரிடத்துள்ள இக்கடவுட்டன்மையினை நன்குணர்ந்தே தமிழ்மக்கள், கடவுளைச்சுட்டும் இறையென்னுஞ்சொல்லால் இவரையும் வழங்குவர். 'உலகபாலருருவாய்நின்று உலகங்காத்தலின்

இறையென்றார்; "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார்' என்று இப்பொருளினைப் பரிமேலழகர் நன்குவிளக்கினர்.

இம்மட்டன்றிப் 'பலவும் மிக்கனர் தேவரிற் பார்த்திவர்' எனத் தேவரினும் மேம்பட இவரியல்புகளைச் சிந்தாமணியில் தருமதத் தன்கூற்றாகத் திருத்தக்கதேவர் சிறப்பித்தனர். *

இத்தகைய அரசரிடம் பேரன்புடையராய்ப் பாராட்டி வாழ்த்துவது நம் தமிழ்மக்கட்குப் புதியதொரு முறையன்று; தொன்றுதொட்டுவரும் மரபாயமைந்துள்ளது. இதனை அறுமுறைவாழ்த்தானும் அறியலாம்.

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக'

என்பது தமிழ்மறை.

𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌾𑌂
𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌮𑌹𑍀𑌂 𑌮𑌹𑍀𑌶𑌾𑌃 ।

---

* இதனை,

'திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்கள் ஒப்பவென் றோதுப
குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர்.'

'அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ.'

'உறங்குமாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்'.

என வருவனவற்றால் (நாமக. உகஎ-உகக) அறியலாம்.

𑌗𑍋𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯 𑌶𑍁𑌭𑌮𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌲𑍋𑌕𑌾 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾 𑌸𑍁𑌖𑌿𑌨𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 ॥

என்ற வடமொழிவழக்கும் இக்கருத் துடையதே.

'ராஜா ப்ரத்யக்ஷதைவதம்' என்பதனை உட்கொண்டு சிலப்பதிகாரத் தொடக்கத்திலும் அரசவாழ்த்தோ டிணைத்தே மங்கலவாழ்த்துக் கூறப்பட்டுள்ளது. †

சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்றாகிய ஆசாரக்கோவையில், ஆசிரியர் பெருவாயின்முள்ளியாரால்,

> அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன்
> நிகரில் குரவர் இவர்; இவரைத்
> தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
> யாவருங் கண்ட நெறி.'

என நாள்தோறும் துயிலெழும்பொழுது அரசரையும் தெய்வங்களோடொக்கத் தொழுதெழுதல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஒழுக்கமாக விதிக்கப்பட்டது.

இவற்றால் உலகியலொன்றே கருதிப் பிறதேயமக்கள் மேற்கொள்ளும் ராஜவிசுவாசமானது, நம் தேசமக்களால் பண்டைக்கால முதலே மறுமைக்கும் உறுதிபயக்கும் அறநெறியாகக் கொள்ளப்பட்டமை நன்குவிளங்கும்.

இவ்வாறு அரசரிடம் குடிகள் பேரன்புபூண்டொழுகக்காரணம்: அவ்வரசர்புரியும் அரிய பெரிய பல உபகாரச்செயல்களும், தம்முயிரினும் சிறக்க மன்னுயிர்போற்றிவருதலுமாம். அரசர் தம்முயிரினும் சால மன்னுயிர்போற்றும் சிறப்பினைத்,—

---

† 'திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்'

என்பது முதலியவற்றிற் காண்க.

'தன்னுயிர்க்கென்கை புல்லிது தற்பயந்தெடுத்த
உன்னுயிர்க்கென நல்லன் மன்னுயிர்க்கெலாம்'

(கம்பர் - அயோத்தியா. மந்திரப்படலம். ௩அ)

என இராமனைக் குறித்து வசிட்டர் தயரதனிடம் கூறியதாகக் கம்பர் கூறுதலால் அறியலாம்.

இங்ஙனம் அரசியற்பொறையாற்றுதல் அரும்பெருஞ்செயலாய் மிக்க வருத்தமளிப்பதாகும்.

'மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லை' எனவும்,

'வாளின்மேல் வரும் மாதவம்'

(கம்பர். அயோத்தியா. மந்தரைசூழ்ச்சி. கசு)

எனவும் வருவனவற்றால் இஃது இனிது விளங்கும்.

இவ்வாறு பெருவருத்தமுற்றும் தம்மைப் பேணுதலால், மக்கள் அரசனையே தம் உயிராகக்கருதி வாழ்வர்.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்' (கஅசு)

என்பது புறநானூறு.

அரசனை உலகனைத்திற்கும் உடலாகவும் கூறுவதுண்டு.

'வையம் மன்னுயி ராக வம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்'

(மந்தரைசூழ்ச்சி—கஎ)

என்பர் கம்பர்.

இவற்றால் அரசர்க்குக் குடிகளோடுள்ள இணை பிரியாத தொடர்பு இனிதுவிளங்கும்.

சிபிச்சக்கரவர்த்தியும், மனுமுறைகண்டசோழனும், பொற்கைப்பாண்டியனும் போல்வார் பலர் இருந்து முறைசெய்த இத்தமிழ்நாட்டில் ராஜவிசுவாசம் நெடுங்காலமாக நின்று வளர்ந்து வருவது ஒரு வியப்பன்று.

இவ்வாறு பண்டுதொட்டு ராஜவிசுவாசத்துடன் ஒழுகும் தமிழ்மக்கள்,—

'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
....
....
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவட்டட் டோரே' (புறம்–கஅ)

என்றதற் கியைய நீர்நிலை பெருக்கியும், அதனால் வாரி மிகுவித்தும்,

திருவிலல்லது கொலைவில் லறியார்
நாஞ்சிலல்லது படையும் அறியார்
சோறு படுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார் நின்னிழல் வாழ்வோரே (புறம்–உ௦)

என்னும்படி போதிய பாதுகாப்பளித்தும், இக்காலத்து மிக்க சீரும் சிறப்புமுற்று இனிதுவாழுமாறு தம்மைப் புரந்துவரும் அரசர் பெருமானிடத்துப் பேரன்பு பூண்டொழுகும் கடப்பாடுடையரே.

இத்தகைய நம் மன்னர்பிரானாகிய மாட்சிமிக்க ஐந்தாம்ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் ஆட்சிக்காலத்தின் வெள்ளிவிழாவை இந்நாள் உலகெங்கும் ஒரு நன்னாளாகக் கொண்டாடுகின்றது.

நம் மதுரைத்தமிழ்ச்சங்கமும் இவ்வெள்ளிவிழாவினைப் பெரு விழைவோடும் ஆற்றுதல் மிக்க பொருத்தமுடையதே.

தமிழ்ப்புலவர்களை ஆதரித்துப் பட்டமும் பரிசும் வழங்கியும், சென்னைச்சருவகலாசங்கம் அண்ணாமலைபல்கலைக்கழகம் முதலிய வற்றால் தமிழ்வளர்ச்சிக்கு வேண்டுவனசெய்தும், இத்தமிழ்ச்சங் கப் பரீக்ஷைகளை அங்கீகரித்தும், மற்றும் பலவகையில் உதவிபுரிந் தும் வரும் இவ்வரசாங்கம் செழித்தோங்கிவளரவும், நம் மாண்பு மிக்க ஐந்தாம்ஜார்ஜ் மன்னர்பெருமான் பொன்விழாவும் வயிரவிழா வும் கொண்டு பொலிந்துவாழவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

சுபம். சுபம்.

செந்தமிழுதவிப்பத்திராசிரியர் T. K. ராமாநுஜையங்கார் இயற்றிப் படித்த

மங்கள வாழ்த்து.

நிலைமண்டில ஆசிரியப்பா.

பூவுல கதனின் மேவுபல் பிறப்பினுள்
அரிதா லம்ம மானிடப் பிறவி;
அதனினும் அரிதே மதிவலி யுடைய
மாந்த ராதல்; மற் றதனினும் அரிதே
புரசை யானைப் பிடர்த்தலை யிருந்தாங்
கரசு செய்யும் அரும்பெறற் செல்வம்;
அதனினும் அரிதே அதிர்கடல் வளைந்த
உலகெலாம் புரக்கும் ஒருநாயகனா
நிலவுதல்; என்பர்—நீணிலத் துள்ளோர்.
மற்றிவை யெல்லாம் ஒத்தொருங் கெய்தி
மண்ணவர் மகிழ விண்ணவர் வியக்க
அந்தமில் இன்பத் தரவணைப் பள்ளி
மேயஎம் பெருமா னேயிவ னென்று
பாவலர் புகழப் பூவல யங்க
ளனைத்தினும் ஒருதனி யாழி நடாத்தி
அறமே புரந்து மறமே துரந்து
மன்பதை வாழ்வே தன்பெரு வாழ்வாக்
கொண்டளி செய்யுந் திண்டிறல் மிகுந்த
ஐந்தாம் ஜார்ஜெனும் அரசர்பெருமானும்
ஏரியல் மேரி யெனும்பெருந் தேவியும்
அரியணை மேவி யையைந் தாண்டு
மாண்புற நிறைந்த மங்கல நன்னாள்
வெள்ளி விழாநனி மேம்பா டுறுக;
இன்னுமிப் பரிசுநம் மன்னனும் தேவியும்
பொன்னெடு வயிர விழாப்பல புரிந்து
மாந்தர் கொண்டாட ஏந்துபொற் குடைக்கீழ்ப்
புவியெலாந் தழையப் புதல்வரும் கிளையும்
செல்வமும் சிறப்பும் பல்பெரு வளமும்
நாளும் நாளும் நனிமிகப் பெற்று
வாழி வாழியிம் மாநிலத் தினிதே.

ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தானவித்வான் தென்திருப்பேரை

ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்கள் இயற்றிய

கமலபந்த வாழ்த்துக்கவி.

வெண்பா.

சாலநல சீலத் தனிச்சார் ஜரசர்கோன்
கோல வெளிவிழாக் கொண்டாற்போல்—ஞால
மினுமிருபத் தைந்தாண்டாண் டெங்குஞ்சீ ரோங்கிக்
கனிவு மிகவேவாழ் க.

குறிப்பு:-இருபத்தைந்து ஆண்டு—25 வருடம் (பொன்விழாக்கொண்டு); இரு பத்தைந்து=ஈரைம்பது—நூறுவருடம் (வயிரவிழாக்கொண்டு).

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு.

ஊ. சா. வேங்கடராமையரவர்க்ள் இயற்றிய

அரசவாழ்த்து.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதவ னெந்த நாளு மத்தமித் தடங்கான் சுற்றும்
பூதல மதனை யாள்வோன் புனிதவிக் டோரியாவின்
தீதகல் பெயரன் செல்வப் பாரதத் திருநா டாளும்
நீதிய னன்னை யொப்பா னேர்மைய னிருபர் கோமான். (1)

ஆண்டகை யருளின் மிக்கா னனைத்துல குவக்கும் பண்பே
பூண்டவ னிங்கி லாந்தின் மன்னவன் பொறுமையாளன்
ஈண்டிய புகழின் செல்வ னினியவ னைந்தாம் ஜார்ஜிங்
காண்டவ னருளா லூழி வாழியிவ் வவனி மீதே. (2)

சுபம்.

௨

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௨] யுவஸு வைகாசிமீ [பகுதி-எ.

Vol. XXXII. May–June 1935 No. 7.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௧௬௦—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

நியாயப்பிரவேசத்தில் (9) பிரசித்தசம்பந்தம் வருமாறு:—

ப்ரஸித்தஸம்பந்தோயதா। ஶ்ராவணஃ ஶப்த இதி।

இதன் பொருள்: பிரசித்தசம்பந்தமாவது 'சத்தம் செவிப் புலனும்' என்பது.

இதனுள், பிரசித்தசம்பந்தம் என்பது பெயர்; சத்தம் செவிப் புலனும் என்பது உதாரணம்.

பிரசித்தம்-சித்தித்திருப்பது-அறியப்பட்டிருப்பது என்றபடி. சம்பந்தம் - தொடர்பு. அறியப்பட்ட தொடர்புடைய பொருளுணர்த்தும் வாக்கியம் பிரசித்தசம்பந்தம் என்பதாம்.

இங்கு, சம்பந்தம் என்றது பக்கவசனத்துக்குரிய விசேடண விசேடியங்களின் தொடர்புணர்வை. என்னை? முன்பு அப்பிரசித்த விசேடணம், அப்பிரசித்தவிசேடியம், அப்பிரசித்தோபயம் என்று விசேடண விசேடியங்கள் அதிகாரப்பட்டிருத்தலால் அவற்றின் சம்பந்தவுணர்வே இங்குப் பிரசித்தசம்பந்தம் என்ற பெயர்ப்பொருளாகக் கொள்ளத்தக்கதென்று குறிப்பாற் பெறப்படுகிறது.

*

முன்பு அவ் விசேடண விசேடியங்களுள் ஒன்றேனும் இரண்டு மேனும் அப்பிரசித்தமாயிருந்தால் வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாகமாட்டாதென்பதுபற்றி, அப்பிரசித்தவிசேடணம் அப்பிரசித்தவிசேடியம் அப்பிரசித்தோபயம் ஆகிய மூன்றும் பக்கப்போலியாம் என்றுசொல்லப்பட்டது.

இங்கு அவ் விசேடண விசேடியங்க ளிரண்டும் தனித்தனி பிரசித்தமாயிருப்பது நலமேயாயினும், அவற்றின்சம்பந்தம் பிரசித்தமாயிருந்தால் அது வழுவாம் என்று சொல்லப்படுகிறது. இதனைப் பின்வரும் உதாரணத்தால் விளங்கக் காணலாம்.

எங்ஙனமெனில், உடும்பைக்கண்ட ஒருவன் அது அணில் போலே கருப்பையிற் பிறப்பதோ? கோம்பிபோலே முட்டையிற் பிறப்பதோ? என்று ஐயுறவுடையனுங்கால் அவனுக்கு, உடும்பாகிய விசேடியம் நேரில் அறியப்பட்டும், முட்டையிற்பிறத்தலாகிய விசேடணம் கோம்பியிடத்தும், கருப்பையிற் பிறத்தலாகிய விசேடணம் அணிலிடத்தும் தனித்தனி அறியப்பட்டுமிருத்தலால் அவ் விசேடண விசேடியங்க ளிரண்டும் பிரசித்தமாயுள்ளன.

அவை பிரசித்தமாயிருந்தாலும், உடும்பினிடத்து அவ் விசேடணசம்பந்தம் ஒன்றும் தோன்றாமையால் அவன் ஐயுறுகின்றானதலால், அவனுக்கு அவற்றின் சம்பந்தம் பிரசித்தமில்லை என்பது பெறப்படுகிறது.

இவ்வாறாக இரண்டுபதப்பொருள்களுக்குள்ள விசேடண விசேடிய சம்பந்தவுணர்வு உண்டாகாதநிலையில், அது அப்பிரசித்த சம்பந்தம் எனப்படும்.

இனி, அவ் விசேடண விசேடியங்களின் சம்பந்தம் பிரசித்தமாகையாவது: உடும்பு முட்டையிற் பிறத்தலைக் கண்டேனும் கேட்டேனும் உணர்ந்த பின்பு அவனுக்கு அவ்வுடும்பு முட்டையிற் பிறப்பது என்னும் உணர்வுக்கு இலக்காயிருத்தலேயாம்.

இவ்வாறு உடும்பு முட்டையிற்பிறப்பது என்று கண்டேனும் கேட்டேனும் எதிரியால் அறியப்பட்டிருக்கும் பிரசித்தசம்பந்தமுடைய பொருளையே அவ்வெதிரிக்கு வாதி கூறுவானாயின் அது வேண்டாதுகூறுதல் என்னும் வழுவுடையதாமாதலால் அது பிரசித்தசம்பந்தம் என்னும் பக்கப்போலியாம்.

பிரசித்தசம்பந்தம் இன்னது, அப்பிரசித்தசம்பந்தம் இன்னது எனப் பிரித்துணருமாறு இவ்வுதாரணம் படைத்துக்கொண்டு காட்டப்பட்டது.

நியாயப்பிரவேசத்தில் காட்டப்பட்ட வுதாரணம் இவ்வாறு பிரித்துக்காட்டற்கு இயலாதது. அது, 'சத்தம் செவிப்புலனும்' என்பது.

இதனுள், சத்தம் விசேடியம்; செவிப்புலனாதல் விசேடணம். இவ்விரண்டும் பிரிவின்றியிருத்தலால் அவை ஒருவனுக்குப் பிரசித்தமாகும்போதே அவற்றை விட்டுப் பிரிந்திராத அவற்றின் சம்பந்தமும் அச்சத்தத்தின்கண்ணே பிரசித்தமாய்த்தோன்றுதலால் சத்தத்தையுணர்ந்த அவனுக்கு இக்கூற்று வேண்டாதுகூறுதலாயிற்று.

இதுகாறும் பிரசித்தசம்பந்தம் என்பதற்கு உரிய சொற்பொருள்கூறி உதாரணம் காட்டி விளக்கலாயிற்று; இனி இப் பக்கப்போலிப்பொருள்பற்றி எழுதப்பட்ட நியாயப்பிரவேச விருத்திவாக்கியங்களும் இங்கு அறிவிக்கத்தக்கன. அவை:—

"പ്രസിദ്ധോ വാദിപ്രതിവാദിനോരവിപ്രതിപത്ത്യാ
ഗൃഹീതഃ। സംബന്ധോ യദ്ധർമ്മിണോ
യസ്മിൻ സഃ തഥോക്തഃ। യഥാ ശബ്ദോ ധർമ്മീ।
ശ്രാവണത്വം സാധ്യധർമ്മഃ। ഉഭയോരേവ
ഹി വാദിപ്രതിവാദിനോഃ പ്രസിദ്ധം" என்பன.

இவற்றின் பொருள்; பிரசித்தமாவது: வாதி பிரதிவாதிகளிருவருக்கும் ஐயப்பாடின்றி அறியப்பட்டதாயிருப்பது. சம்பந்தமாவது: தரும தருமிகளின் லக்ஷணரூபசம்பந்தம். இது எதன்கணுண்டோ அது பிரசித்தசம்பந்தமாம். ('சத்தம் செவிப்புலனும்' என்பதனுள்) சத்தம் தருமி; செவிப்புலனுதல் சாத்தியதருமம். இவ்விரண்டும் வாதி பிரதிவாதிகளுக்குப் பிரசித்தம் என்பது.

இங்கு, பிரசித்தம் என்பதற்கு 'வாதி பிரதிவாதிகளால் ஐயப்பாடின்றி அறியப்பட்டிருப்பது' என்று பொருள் வரையப்பட்டிருக்கிறது; இது பொருந்துவதன்று. ஏனெனில்? வாதியால் அறியப்பட்டிருப்பது குற்றமாகமாட்டாது. நல்லசாதனத்துள்ளும் வாதியால் ஐயப்பாடின்றி அறியப்பட்டிருப்பதையே அவன் எதிரிக்கு அறிவிக்கவேண்டியவனுயிருத்தலால், அவன் ஐயப்பாடின்றி அறிந்துகொண்டிருப்பதை எதிரிக்குக்கூறுவது நற்பக்கவசனமாகும். ஆதலால் அது பக்கப்போலிக்கு உறுப்பாகிய குற்றமாகமாட்டாதென்க.

மற்று எதிரியால் ஐயப்பாடின்றி அறியப்பட்டிருப்பதை வாதி அவ்வெதிரிக்கு அறிவிக்கவேண்டாமையால், அவ்வெதிரியால் அறியப்பட்டிருக்கும் விசேடண விசேடிய சம்பந்தமே இங்குப் பக்கப்போலிக்கு உறுப்பாகத்தக்க பிரசித்தசம்பந்தம் என்று கொள்ளத்தக்கது.

'சம்பந்தம்' என்பதற்குத் 'தர்ம தர்மி லக்ஷணம்' என்று உரைவரையப்பட்டிருக்கிறது. தர்மம் விசேடணமாகவும் தர்மி விசேடியமாகவும் இருக்கும்; ஆதலால் அவற்றின் லக்ஷணமாயுள்ளதும் விசேடண விசேடிய சம்பந்தமே. இதனுலும் விசேடண விசேடிய சம்பந்தவுணர்வு சித்தித்திருப்பதே இப்பக்கப்போலியின் இலக்கணமென் றறியத்தக்கதாயிற்று. இஃது இவ்வாருகவும் நியாயப்பிரவேச விருத்தியுள் இதனை விளக்குமிடத்து,

𑌯𑌥𑌾 𑌶𑌬𑍍𑌦𑍋 𑌧𑌰𑍍𑌮𑍀। 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌃।
𑌉𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌨𑍋𑌃 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂।

என்ற வாக்கியங்களால் '"சத்தம் செவிப்புலனும்" என்பதனுள் சத்தம் தருமி; செவிப்புலனுதல் சாத்தியதருமம்; இவ்விரண்டும் வாதி பிரதிவாதிகளுக்குப் பிரசித்தம்.' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் பொருந்தாது. எனெனில், தரும தருமிகள் பிரசித்தமாயிருப்பது வழுவாகமாட்டாது. முன்பு பக்ஷலக்ஷணம் கூறுமிடத்து நியாயப்பிரவேசத்திலேயே,

𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌧𑌰𑍍𑌮𑍀 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑌾
𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌃।

என்பதனுல் 'பிரசித்தமான தர்மியானது பிரசித்தவிசேடணத்துடன் கூடிய தன்மையாலே தான் துணியப்படுவதாக விரும்பப்படுவது' என்றுள்ள பக்ஷலக்ஷணத்தில் தர்ம தர்மிகள் (—விசேடண விசேடியங்கள்) இரண்டும் பிரசித்தமாயிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வேருகச்சொல்லவேண்டிய பக்ஷாபாஸ லக்ஷணத்தையும் அப்படியே சொல்வது பொருந்தாதென்பதாம்.

இங்குக் காட்டிய (𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃) 'சத்தம் செவிப்புலனும்' என்னும் உதாரணத்துள், சத்தம் தருமி; செவிப்புலனுதல் தருமம். இவற்றின் சம்பந்தமாவது: தருமம் விசேடிப்பதாயும் தருமி விசேடிக்கப்படுவதாயும் இருக்கும் தொடர்பு. அஃதாவது 'இஃது இற்று' என்னும் வாய்பாடுடைய இரண்டு பதப்பொருள்கள் இணைந்து ஒருவாக்கியப்பொருளாகத் தோன்றற்குரிய அப் பதப் பொருள்களின் இயைபு.

இவ்வியைபு இங்குக் காட்டிய 'சத்தம் செவிப்புலனும்' என்னும் உதாரணத்தில் பிரசித்தமாயிருக்கையாவது: சத்தம் அறியப்பட்டபொழுதே அது செவிப்புலனுயிருத்தலுடன்கூடியதாயிருத்தலும் அறியப்பட்டிருத்தல்.

சத்தத்தை அறிந்தவனுக்கு அது செவிப்புலனாதலுடையதாயிருத்தல் என்னும் தொடர்பும் (-அவற்றின் சம்பந்தமும்) அறியப்பட்டதாயிருத்தலால், இது பிரசித்தசம்பந்தம் என்னும் பக்கப்போலியாயிற்று—என்பது நியாயப்பிரவேசநூலின் கருத்தாயிருக்கவேண்டும்.

மணிமேகலையில் இப்பக்கப்போலியின் பெயர் அப்பிரசித்தசம்பந்தம் என்று சொல்லாலும் பொருளாலும் மாறுபட்டிருக்கிறதென்று முன்னமே சொல்லப்பட்டது.

நியாயப்பிரவேசத்திற் சொல்லியபடி 'பிரசித்தசம்பந்தம்' என்பதே பக்ஷவசனதோஷமாய்ப் பக்கப்போலியாதற்கு உறுப்பாயமைதலால், அதன் மறுதலைப்பொருளாகிய 'அப்பிரசித்தசம்பந்தம்' என்பது பக்ஷவசனத்துக்குக் குணமாயமையும்; அக் குணமுடைய வாக்கியம் குற்றமுள்ளதாகிய பக்கப்போலியாகமாட்டாது.

மணிமேகலை நூலாசிரியர் நியாயப்பிரவேசநூலைப்பார்த்திருப்பாராளுல் அவரும் குற்றமின்றியே பொருட்பொருத்தமுள்ள 'பிரசித்தசம்பந்தம்' என்ற பெயரையமைத்துச் செய்யுளியற்றியிருப்பார்.

அங்ஙனமன்றி அப்பெயர் வழங்கவேண்டிநின்ற இரண்டு இடங்களிலும், அதாவது,

'அப்பிர சித்த சம்பந் தம்என' (௧௫௩)
'அப்பிர சித்த சம்பந்த மாவது' (௧௮௬)

என்னும் அடிகளிரண்டிலும் பிரசித்த சம்பந்தம் என்று திருத்தி அமைத்துக்கொள்ளுதற்கும் இடங்கொடாதிருக்கும்படி 'அப்பிரசித்தசம்பந்தம்' என்றே வழங்கியிருப்பதைநோக்குங்கால், அவர் நியாயப்பிரவேசநூலைப் பின்பற்றினரில்லையென்று தெளிவாயறியலாம்.

இப்பெயர் ஒவ்வொருநூலாசிரியரும் தாமேயும் படைத்துக்கொள்ளத்தக்க உதாரணப்பெயர் போல்வதன்று. எல்லோரும்

ஒருபடியாகவே வழங்குதற்குரிய நூல்வழக்கான குறியீடுபற்றி வழங்கும் பெயரென்பதும் நோக்கத்தக்கது.

இப்பெயர் நியாயப்பிரவேசத்திலுள்ளபடி பிரசித்தசம்பந்தம் என்னும் பொருளுடையதாயிருப்பதே சுத்தபாடமாகத்தோன்றுவதால், அதன் மறுதலையாக 'அப்பிரசித்தசம்பந்தம்' என்று மணிமேகலையிலுள்ளது சுத்தபாடமில்லையென்று தெரிகிறது. இஃ திங்ஙனமாக.

மணிமேகலையில் இப்பக்கப்போலி நிரூபணம் வருமாறு:—

'அப்பிர சித்த சம்பந்த மாவது
எதிரிக் கிசைந்த பொருள்சா தித்தல்' (கஅசு—எ) என்பது.

இதனுள், 'அப்பிரசித்தசம்பந்தம்' என்பது பெயர்; 'எதிரிக் கிசைந்தபொருள்சாதித்தல்' என்பது இலக்கணம். இது நியாயப் பிரவேசத்தில் இல்லை. எதிரி-பிரதிவாதி. இசைந்தபொருள்-அவன் உடன்பட்டிருக்கும் துணிபொருள். விசேடண விசேடிய சம்பந்தம் அறியப்பட்டபொருள் அவ் அறிந்தோனுக்கு உடன்பட்டதாயிருக்குமாதலால் அதனை இசைந்தபொருளென்றார். இசைந்த பொருள் எனச் செயப்படுபொருட்பெயர்கொண்டது. எதிரிக்குச் சாதித்தல் என இயையும். எதிரிக்கு-எதிரியினிடத்தில்; வேற்றுமை மயக்கம். சாதித்தல்-துணிதல். சொல்வோனதுதொழில் (சாதித்தல்) அவன் சொல்லின்மேல் ஏறிநின்றது.

இதனுள், எதிரிக்கிசைந்த பொருள் சாதித்தல் என்று சொல்லியிருப்பது, நியாயப்பிரவேசவிருத்தியில் வாதி பிரதிவாதிகள் இருவருக்கும் பிரசித்தம் என்று சொல்லியிருப்பதற்கு வேறுபட்டிருக்கிறது.

இனி, இதிலுள்ள 'அப்பிரசித்தசம்பந்தம்' என்பதின் சுத்தபாடம் ஆராயத்தக்கது.

மணிமேகலையடிகளிலுள்ள 'அப்பிரசித்தசம்பந்தம்' என்ற பெயரை நீக்கி நியாயப்பிரவேசத்திலுள்ளபடி சுத்தபாடமான பிரசித்தசம்பந்தம் என்ற பெயரை அமைப்போமானல்,

'பிரசித்த சம்பந் தம்மென'
'பிரசித்த சம்பந்த மாவது'

என்பவைகள் அடிகளாகவேண்டும். அங்ஙனம் அவை அடிகளாகுமிடத்து அவ்வடிகளின் முதற்சீர் ஓரசைச்சீராய் ஓசைகெட்டுச் சீரும் செய்யுளும் சிதைதலால், 'பிரசித்தசம்பந்தம்' என்று திருத்தியமைத்துக்கொள்ளற் கிடனில்லை.

'அப்பிரசித்த விசேடணம்'
'அப்பிரசித்த விசேடியம்'
'அப்பிரசித்த வுபயம்'
'அப்பிரசித்த சம்பந்தம்'

என அப் பக்கபோலிப்பெயர்களின் நிலைமொழிவரிசையை நோக்கும்போது 'அப்பிரசித்த' என்னும் நிலைமொழி பிழைபட்டிருக்குமென்று தோன்றவில்லை. 'சம்பந்தம்' என்ற வருமொழி நியாயப்பிரவேசத்திலுள்ளபடியே மணிமேகலையிலும் ஒருபடியாயிருத்தலால் அதுவும் பிழைபட்டிருக்குமென்று தோன்றவில்லை.

ஆதலால் அவ் விரண்டுமொழிகளையும் உள்ளபடி வைத்துக்கொண்டே பொருட்பொருத்தம் உண்டாம்படி செய்யுள் சிதையாமல் திருத்தியமைத்துக்கொள்ளற்கு இடனிருக்கவேண்டுமென்று எண்ணி, யான் 'அநுமான விளக்கம்' என்னும் தருக்கநூலொன்று சுருக்கமாயெழுதும்பொழுது, இப் பக்கப்போலியின்பெயர் 'அப்பிரசித்தாசம்பந்தம்' என்றிருக்கவேண்டுமென்று திருத்தியமைத்துக் கொண்டேன்.

மணிமேகலையில் இவ்வாறே 'விருத்தவியபிசாரி' என்றிருக்கும் ஏதுப்போலியின் பெயரை 'விருத்தாவியபிசாரி' யென்று திருத்தியமைத்துக்கொள்ளவேண்டுமென்று மஹாமஹோபாத்தியாயபிரும்ம

ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரியவர்கள் தாமெழுதிய மணிமேகலையாராய்ச்சியிற்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. அதுபோல் 'அப்பிரசித்தசம்பந்தம்' என்றிருப்பதையும் பொருட்பொருத்தமுண்டாம்படி 'அப்பிரசித்தாசம்பந்தம்' என்று திருத்திக்கொண்டால் இருநூற்கருத்தும் ஒருவாறு பொருத்தமுடைத்தாயிருக்குமென்று தோன்றுகிறது.

இத்திருத்தத்தின்படி பாடத்தை மாற்றிக்கொண்டால்,

'அப்பிர சித்தா சம்பந் தம்மென' (கறுரு) என்றும்,
'அப்பிர சித்தா சம்பந்த மாவது' (கஅகூ) என்றும்

சீரும் செய்யுளும் சிதையாது செவ்வனே அமைவனவாம்.

இனி, 'அப்பிரசித்தாசம்பந்தம்' என்னும் இத்தொடர்மொழிப் பெயரின் பொருள்விளக்கம் வருமாறு.—

இங்கு, 'சம்பந்தம்' என்பது பக்கவசனத்தின் நிலைமொழி வருமொழிப் பொருள்களுக்குள்ள தொடர்பேயாம். அதுவே விசேடண விசேடிய சம்பந்தம் என்று கொள்ளத்தகும். என்னை? இதன் முன்புள்ள பக்கப்போலிப்பெயர்களில் அப்பிரசித்தவிசேடணம், அப்பிரசித்தவிசேடியம், அப்பிரசித்தவுபயம் என விசேடண விசேடியங்களே அதிகரிக்கப்பட்டுவருதலால், அவற்றின் சம்பந்தம் என்பதே பொருளாகும். அவற்றின் சம்பந்தமாவது:—'சிப்பி முத்துடையது' என்னும் தொடர்மொழிப்பொருளிற் சிப்பி விசேடியம்; முத்து விசேடணமாம். இவை ஒருவனுக்குத் தனித்தனி பதப்பொருளாகப் பிரசித்தமாயிருக்கலாம். எங்ஙனமெனில்? முத்தில்லாத சிப்பியைமட்டும் கண்டவனுக்குச் சிப்பியே பிரசித்தமாயிருக்கும். அவனே மற்றும் ஓரிடத்தில் முத்துமாலையைக் கண்டபொழுது முத்துப் பிரசித்தமாயிருக்கும். இவ்விரண்டும் அவனுக்கு வெவ்வேறாகப் பிரசித்தமாயுள்ள தனிப் பதப்பொருள்களாம். இவை வாக்கியப்பொருளாகமாட்டா.

தனிப் பதப்பொருளாக இருக்கும் நிலையில் அவை (இரண்டு பொருளும்) ஒருவனுக்குப் பிரசித்தமாயிருந்தாலும், அவை ஒன்றற்கொன்று விசேடண விசேடியங்களாகாமையால், அவனுக்கு

2

அவற்றில் விசேடண விசேடிய சம்பந்தம் பிரசித்தமில்லை. அப்பொழுது அவனுக்கு அவ் விரண்டு பதப்பொருளும் பிரசித்தமில்லாத சம்பந்தமுடையனவாயிருத்தலால், அவற்றிற்குள்ள சம்பந்தம் அப்பிரசித்தசம்பந்தம் எனப்படும்.

இந்த அப்பிரசித்தசம்பந்தமானது வாக்கியப்பொருளுணரவேண்டிநிற்கும் எதிரிக்கு அவ்வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாவதற்கு இன்றியமையாததாய் முன் நிகழ்தற்கு உரியதாயிருத்தலால், இது நல்லசாதனமாகிய பக்கவசனத்துக்கு இலக்கணமாயமைவதே. எங்ஙனமெனில்? 'சிப்பி முத்துடைத்து' என்னும் வாக்கியரூபமான பக்கவசனம் கேட்டபின்பு, அச்சிப்பிக்கு முத்துடைமையாகிய முத்தின்சம்பந்தம், அதுகேட்டவனுக்குப் பிரசித்தமாகிறது. இந்தச் சம்பந்தவுணர்வு எதிரிக்கு அவ்வாக்கியங் கேட்பதற்கு முன்னமே கண்டேனும் கேட்டேனும் பிரசித்தமாயிருந்தால், அவனுக்குச் 'சிப்பி முத்துடைத்து' என்னும் அப்பக்கவசனத்தால் பொருளுணர்ச்சியுண்டாகவேண்டாமையால், அது 'பிரசித்தசம்பந்தம்' என்னும் பக்கப்போலியாம்.

பிரசித்தசம்பந்தமுள்ள வாக்கியம் பக்கப்போலியாகவே, அதன் மறுதலையான அப்பிரசித்தசம்பந்தம் நற்பக்கவசனவுருப்பாமாதலால் அது பக்கப்போலியாகமாட்டாது.

ஆகவே, அந்த அப்பிரசித்தசம்பந்தத்தின் மறுதலையான அப்பிரசித்தாசம்பந்தம் (அப்பிரசித்த அசம்பந்தம்) என்பது, பிரசித்தசம்பந்தத்தின்மறுதலைக்கு மறுதலையாய்ப் பிரசித்தசம்பந்தத்தோடு ஒருபொருளுடையதாமாதலால் பக்கப்போலியின்பெயராதற்கு உரியதாமென்று தோன்றுகிறது.

இங்கு, குடத்தினது இன்மையின் இன்மை குடமேயாவதுபோல, பிரசித்தசம்பந்தத்தின் இன்மையின் இன்மை பிரசித்தசம்பந்தம் எனக் கொள்ளத்தகும். இக்கொள்கை நியாயப்பிரவேசநூலார்க்கு உடன்பாடன்றென்று முன்பு காட்டப்பட்டது.

அப்பிரசித்தாசம்பந்தத்தின் பொருள்விளக்கம்:—

'அப்பிரசித்தாசம்பந்தம்' என்பதற்கு, அப்பிரசித்த—வெளிப் படையாகாத (—அறியப்பட்டிராத); அசம்பந்தம்—விசேடண விசேடிய சம்பந்தமில்லாமையையுடையது என்பது பொருள். அதாவது: பிர சித்தமான விசேடண விசேடிய சம்பந்தமுடையது என்பதாம்.

அல்லது, அசம்பந்தம்—(விசேடண விசேடியங்களின்) சம்பந்த ஞானமின்மை. பிரசித்தமான அசம்பந்தம்—பிரசித்தாசம்பந்தம்.—பிர சித்தமான விசேடண விசேடிய சம்பந்தஞானமின்மையாம். இது வாக் கியகுணம். இதன் மறுதலை, பிரசித்தாசம்பந்தமின்மை; அதுவே அப் பிரசித்தாசம்பந்தம் என்று கொள்ளினும் வாக்கியதோஷமாய்ப் பக்கப் போலியின் பெயராதற்குரியதே.

மணிமேகலையாசிரியர், பிரசித்தசம்பந்தம் என்றபொருளில் அப் பெயரால் நேரேகூறுது, 'அப்பிரசித்தாசம்பந்தம்' என்று இருமுறை மறுப்பாற் கூறியது, 'பிரசித்தசம்பந்தம்' துணிதல்வேட்கையுள்ள வழிப் பக்கப்போலியாகாது என்பதுகருதிப்போலும்.

இதனாற் போந்தபயன் சம்பந்தம் பிரசித்தமாயிருப்பது துணிதல் வேட்கையுள்ளவழிப் பக்கப்போலியாகமாட்டாது; அசம்பந்தம் பிரசித்த மில்லாதிருப்பதே இப்பக்கப்போலியாவது என்பதாம்.

இக்கொள்கை, நியாயநூலுடையார்க்கு உடன்பாடாயுள்ளது; நியா யப்பிரவேசநூலார்க்கு உடன்பாடன்று. இதனை, நியாயப்பிரவேசத்துள் பக்கப்போலியிலக்கணங்கூறுமிடத்தில்,

'ஸாத்யயிதுமிஷ்டோபி ப்ரத்யக்ஷாதிவிருத்த: பக்ஷாபாஸ:'

என்று கூறியிருத்தலால் வெளியிட்டிருக்கிறார்.

இதன்பொருள்: துணிபொருள் சாதித்தற்கு விரும்பப்பட்டதா யிருந்தாலும் பிரத்தியக்கவிருத்தம் முதலாகச் சொல்லப்பட்ட ஒன்ப தும் பக்கப்போலியாம் என்பது.

இதிற்சொல்லிய பிரத்தியக்கவிருத்தம் முதலிய பக்கப்போலிகளுள் பிரசித்தசம்பந்தமும் ஒன்ருகும். அதுவும் துணிதற்கு விரும்பப் பட்டதாயிருந்தாலும் பக்கப்போலியாம் என்று சொல்லப்பட்டதாயிற்று.

இதற்கு மாருகவே, தருக்கநூல்களில், துணிதல்வேட்கையுள்ள வழிப் பிரசித்தசம்பந்தம் பக்கப்போலியாகாது என்பது போதர,

'ஸிஷாயயிஷாவிரஹவிஸிஷ்டஸித்யபாவ: பக்ஷதா'

என்ற வாக்கியத்தால், துணிதல்வேட்கையில்லாமையோடுகூடிய துணி பொருட்பெறுதியின்மை பக்கத்தன்மை என்று இருமுறை மறுப்பாற் பக்கவிலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விருமுறைமறுப்பின் பயன், துணிதல்வேட்கையுள்ளவழித் துணிபொருட்பெறுதி (பிரசித்தசம்பந்தம்) குற்றமாகமாட்டா தென் பதே.

நியாயப்பிரவேசத்தில், (ஸாயயிதுமிஷ்டோவி) 'துணிதற்கு விரும்பப்பட்டதானுலும்' என்று சொல்லியிருப்பதுபோல் மணிமேகலே யிற் சொல்லாமலும், பிரசித்த சம்பந்தம் குற்றம் என்று நேரேகூருமலும், 'அசம்பந்தம் பிரசித்தமில்லாதிருப்பது குற்றம்' என்று சொல்லியிருப் பதை நோக்குங்கால், சம்பந்தம் பிரசித்தமாயிருந்தாலும், 'பிரசித்தசம்பந் தம் துணிதல்வேட்கையுள்ளவழிக் குற்றமாகமாட்டாது' என்னும் நியாயநூற்கொள்கைபற்றிக் கூறியிருப்பதாகத் தோன்றுகிறது.

இக்கொள்கை நியாயப்பிரவேசத்துள்ள மறுப்புக்கு இலக்காகக் காணப்படுவதால், நியாயப்பிரவேசக்கொள்கைக்கு இக்கொள்கை காலத் தால் முற்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

மணிமேகலேயில் இத்திருத்தம் கொள்ளாமலே இப்போதுள்ள மூலத்திலுள்ளபடி 'அப்பிரசித்தசம்பந்தம்' என்பதையே சுத்தபாடமாக வைத்துப் பொருள்கொள்வதற்கு இடமிருக்குமானுல் நலமாயிருக்கு மென்றெண்ணுகிறேன்.

இனி, மணிமேகலையில் இதன் உதாரணம்,

"மாறும் பௌத்தற்குச் சத்த வநித்தம்
கூறி லவன்கொள் கையஃ தாகலில்
வேறு சாதிக்க வேண்டா தாகும்" (கஅ-அ-கூ0) என்பது.

இதன்பொருள்: மாறும் பௌத்தற்கு—எதிரியாயுள்ள பௌத்த னிடத்தில். சத்தவநித்தம் கூறில்—சத்தம் அநித்தம் என்று பக்கவசனம் கூறினால். அவன்கொள்கை அஃதாகலின்—பௌத்தாகமத்தால் 'எல்லாப் பொருளும் அநித்தம்' என்று உணர்ந்திசைந்திருக்கும் அவனுக்குச் 'சத்தம் அநித்தம்' என்பதும் உடன்பாடேயாமாதலால்; அதாவது: அக் கூற்றுக்கு அவனால் அறியப்பட்டிராததொன்றை அறிவுறுத்தற்கு உறுப்பாகிய விசேடண விசேடியங்களின் அசம்பந்தவுணர்வு (—சம்பந்த வுணர்வின்மை) பிரசித்தமாயில்லாமல் சம்பந்தவுணர்வே பிரசித்தமா யிருத்தலால் என்றபடி. வேறு சாதிக்கவேண்டாதாகும்—அவன் அறிந்த பொருளையே மறித்தும் துணிவிப்பது வேண்டாது கூறுதலாதலால், அக்கூற்று அப்பிரசித்தாசம்பந்தமாகும் என்பதாம்.

இதனுள் 'மாறும் பௌத்தற்கு' என்றது, இதன் உதாரணம் காட்டு தற்கு ஏற்றதோர் சார்புகூறியவாறு. சத்தவநித்தம்: சத்தம் அநித்தம் என்னும் தொகாநிலைத்தொடராகக் கூறக்கடவதான பக்கவசனத்தை விளக்குமுகத்தால் அநுவதிக்குமிடத்துப் பொருள்பற்றித் தொகை நிலைத்தொடராகக் கூறினாயிற்று. அங்ஙனம் கூறினாயினும் 'சத்தம் அநித்தம் என்று பக்கவசனம் கூறினால்' என்பதே அவர்க்குக் கருத் தாகக்கொள்க.

இவ்வுதாரணமும் நியாயப்பிரவேசத்திற் காட்டப்பட்ட வுதாரணத் தின் வேறுபட்டது.

இனி, மணிமேகலையிலுள்ளபடி அப்பிரசித்தசம்பந்தம் என்பதை யே சுத்தபாடமாகவைத்துக்கொண்டு பொருள்சொல்லவேண்டுமானால் விசேடண விசேடிய சம்பந்தத்தைவிட்டு, வாக்கிய வாக்கியார்த்த சம் பந்தவகையுள் பொருந்துவதொன்றைக் கொண்டு பொருள்சொல்லக் கூடுமாயினும், அதுவும் நியாயப்பிரவேசநூலின் வேறுபடுவதாம்.

இதுகாறுங் கூறியவாற்றால், பக்கப்போலிநிரூபணம்பற்றி, நியாயப்பிரவேசத்துக்கும் மணிமேகலைக்குமுள்ள பலவகை வேறுபாடுகளும் விளங்கும். அவற்றுள் முதன்மையாயுள்ளவை நான்கு. அவை:

1 நியாயப்பிரவேசம் பிரசித்தசம்பந்தம் என்பதை மணிமேகலை அப்பிரசித்தசம்பந்தம் (அப்பிரசித்தாசம்பந்தம்) என்பது.

2 நியாயப்பிரவேசம் (விருத்தியில்) வாதி பிரதிவாதிகளுக்குப் பிரசித்தமாயிருப்பது பிரசித்தசம்பந்தம் என்று சொல்லியிருப்பதை, மணிமேகலை (எதிரிக்குப் பிரசித்தமாயிருப்பது என்பது போதா) எதிரிக்கிசைந்த பொருள் சாதித்தல் (பிரசித்தசம்பந்தம்) என்று சொல்லியது.

3 நியாயப்பிரவேசம், துணிதல்வேட்கையுள்ளவழியும், பிரசித்தசம்பந்தம் குற்றமாம் என்று மறுத்திருப்பதை, மணிமேகலை துணிதல்வேட்கையுள்ளவழிப் பிரசித்தசம்பந்தம் குற்றமாகமாட்டாது என்பது குறிப்பாற்றோன்றுமாறு (பிரசித்தசம்பந்தம் குற்றமென்னாது) அப்பிரசித்தாசம்பந்தம் குற்றமாம் என்று கூறுவது.

4 நியாயப்பிரவேசம் இன்மையின் இன்மையும் இன்மையே என்று கொள்வதை, மணிமேகலை இன்மையின் இன்மை உண்மையாம் என்றுகொள்வது.

இவ்வாறான கொள்கைவேறுபாடுகள், மணிமேகலை நியாயப்பிரவேசத்தைப் பின்பற்றியதன்று என்பதை நிரூபிக்கத்தக்கன.

இங்ஙனம் பக்கப்போலிநிரூபணம் எழுதப்பட்டது. இனி ஏதுப்போலிநிரூபணம் எழுதப்படும்.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கசுசு—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

அநுமான், தான் இலங்கைக்கு வந்தவாறு கூறுதல்.

['உன் ஆபரணங்களால் இராமபிரான் உயிர்தரித்திருக்கின்றான். அவன் ஆணையைச் சிரமேற்கொண்டு உன்னைத் தேடும்பணிசெய்யப் புறப்பட்ட வானர சேனாபதிகளுள்ளே வாலி குமாரனும் இளவரசனுமான அங்கதன், இரண்டுவெள்ளம் சேனையுடன் தென்திசைக்கு வந்திருக்கின்றான். அந்தச் சேனையைச் சேர்ந்த யான் இலங்கைக்கு வந்தேன்' என்று அநுமான் கூறினான்.

சீதைகேட்க, அநுமான் இராமனை வருணித்தல்.

அது கேட்ட சீதை, 'எம்பெருமான் திருமேனியிலக்கணத்தை நீ தெரிந்தவாறு செப்புவாயாக' என, அநுமான் கூறுவானானான்:—

இராமன் அங்கவருணனை எளியதன்றெனல்.

'அழகிற்சிறந்த மற்றைய ஆடவர்களுடைய அங்கங்களுக்கு உயர்ந்த உவமானங்களாகத் தெரிந்தெடுத்துக் கூறும் பொருள்கள் யாவையும் இராமபிரான் அங்கங்களுக்குத் தாழ்ந்தவைகளாயிருக்கின்றன. அவன் திருமேனியைச் செவ்வையாகத் தெரிந்த நீ, என் வருணனையை அடையாளமாகக்கொண்டு தொடர்ந்து, உன் ஞாபகமும் மனோபாவனையும் துணையாக, அவன் அங்கலக்கணங்களனைத்தையும் அறிந்துகொள்வாயாக' என்று இராமன்மேனியை அடிமுதல் முடியிறுதியாக அநுமான் வருணிப்பானானான்:—

இராமனது பாதாதிகேச வருணனை.

(பாதம், விரல், நகம், புறவடி, தொடைகளின் வருணனை)

'அணியிலக்கணம்வல்லார், பாதத்துக்குத் தாமரைமலர் உவமானமென்பர். அம்மலர் உவமானமாகவொண்ணாத உயர்வுடையது இராம

பிரான் சிபாதம். அந்தப் பாதத்தின் செந்நிறத்தை நோக்கச் செம் பவளம், கருங்குவளை யென்னும்படி கரியதாய்விடும். விரல்களுக்குக் கேவலம் கற்பகதருவின் அரும்பையும் பவளக்கொடியையும் உவமை யாகக் கூறலாமோ? உதயசூரியனது சிவந்த கிரணங்கள் ஒப்பென்று கூறலாமேயன்றி வேறு கூறலாகாது. பதினைந்து திதிகளில் பதினைந்து வடிவமாகத்தோன்றும் சந்திரன், சிறியனவும் பெரியனவுமாக விளங் கும் நகங்களுக்கு உவமானமாகவேண்டுமானால், (அந் நகங்கள்போலச்) சிறுத்தும் பருத்தும் பளபளத்தும் தோன்றுதல்மட்டும் போதாது, பதினைந்து வடிவமின்றிப் பத்து வடிவமுடையதாதலும் வேண்டும்; அன்றியும், மறுவின்றியும் இருத்தல்வேண்டும். திரிவிக்கிரமாவதாரத் தில் *உலகமெல்லாம் பரவிய புறவடிக்கு அப்பெருமையில்லாத புத்த கம் ஒத்ததெனலாமோ? தொடைகளுக்கு உவமானமாகவொண்ணுமை யினால், எட்டுத்திக்குயானைகளின் துதிக்கைகளும் நாணமடைந்தன வாதலால், அத் தொடைகளுக்கு இவ்வுலகத்தில் உவமையில்லை. மே லுலகத்திலுள்ள தருமசொரூபியாகிய கருடபகவானது பிடரியே உவ மானமாதற் குரியது.']

(மார்புவருணனை)

86 'பொருவரு மரகதப் பொலம்கொள் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்கல் ஆகத்தைப்
பிரிவற நோற்றில ளென்னில், பின்னை, அத்
திருவினில் திருஇலார் யாவர்? தெய்வமே!'

இ-ள். 'ஒப்பற்ற அழகுடைய பெரிய மரகதமலை அஞ்சும்படி அகன்று மேன்மையுற்ற (தும் இப்போது இலக்குமி) பிரிந்திருக்கின்ற (துமான இராமபிரானுடைய) மார்பை (அந்த) இலக்குமி (எப்போதும்) பிரிதலில்லாதிருக்கும்படி தவஞ்செய்திலளென்றால், தெய்வமே! (அந்த இலக்குமியான) செல்வியினும் செல்வமில்லாதவர் யாவர் (உளர்)!'

'பொருவு அரு பொலம்கொள் மால் மரகதவரை' என இயைக்க. உயர்தல் - மேன்மையுறுதல். விலங்கல் - விலகுதல். ஆகம் - மார்பு. விலங்கல் ஆகம் - (திருமால் இராமனாக அவதரிக்கும்போது இலக்குமி)

---

* எல்லா உலகங்களிலும் வியாபித்த; எல்லா உலகோரும் வணங்கிய.

விலகினமையையுடைய மார்பு - (இலக்குமி) பிரிந்த மார்பு. பின்னை - இலக்குமி. 'பின்னை பிரிவற நோற்றிலளென்னில்' என மாற்றுக. முதல் திரு செல்வத்துக்கு அதிதேவதையாய்ச் செல்வியெனப்பெற்ற இலக்குமியையும் இரண்டாம் திரு செல்வமென்னும் பாக்கியத்தையும் உணர்த்திநின்றன. மனநிறைவும் குறைவுமே உண்மைச்செல்வமும் வறுமையுமாதலால், 'திரு இலார்' என்பதன் உள்ளுறைபொருள் 'மன நிறைவு இல்லார்' அல்லது 'மனக்குறைவுடையார்' என்பதாமென்பது காண்க. 'தெய்வமே!' என்றது, தாம் துன்புறுவாரும் பிறர் துயரங் கண்டு இரங்குவாரும் 'தெய்வமே! இந்தக்கதி நேரலாமோ?' என்று கூறும் உலகவழக்கை அனுசரித்துக் கூறியதென்க: 'தெய்வம்போல் வாளே' எனச் சீதையை விளித்ததெனலுமாம். 'பிரிவற நோற்றனள்' 'திருவினிற்றிருவுளார்' என்பனவும் பாடம். இந்தப் பாடங்கள் கொண்டார் 'விலங்கல் ஆகத்தை' என்பதற்கு 'மலைபோன்ற [எதற்கும் சலியாத] இராமபிரானுடைய திருமார்பை' என்றும் 'தெய்வமே' என்பதற்குக் 'குலதெய்வம்போன்றவளே' என்றும் பொருள்கூறியிருத்தல் காண்க.

பிறவிக்குருடர் துன்பத்தினும் பிறவிதொட்டுக் கண் உடையரா யிருந்தவர் கண் இழக்கநேர்ந்தபோது அடையும் துன்பம் மிகவும் அதிகமாயிருத்தல்போலத் தான் (இலக்குமி) திருப்பாற்கடலிலே பிறந்ததுதொட்டுத் திருமால்மார்பில் வீற்றிருக்கும் பிறவிச்செல்வ முடையவளான இலக்குமி, திருமால் இராமனாக அவதரிக்கும் அவதாரத்தில் அவன்மார்பைவிட்டு விலகிப் பிரிந்திருக்கும்படி நேர்ந்ததனால் அந்தச் செல்வத்தை இழந்தது, அவன்மார்பை அடைய ஆசைப்படும் அந்நியமாதர் அடையுந்துன்பத்தினும் மிக்க துன்புவிளைக்கும் நிர்ப்பாக்கியமாமென்பதை வற்புறுத்த (உண்மையில், பாக்கியமே தானான) இலக்குமியினும் நிர்ப்பாக்கியரெவருமில்லையென்பார் 'திருவினிற் றிருவிலார் யாவர்? தெய்வமே!' என்றார். இவ்வாறு, எல்லாருக்கும் பாக்கிய மளிக்கும் பாக்கியலக்குமியைப் பரமதரித்திரிபோலச் சமத்காரமாகக் கூறியது, 'தீயினும் குளிர்ச்சிமிக்க பொருள் யாது?, பனிக்கட்டியினும் வெப்புடையது எப்பொருள்?' என்றாற்போல, அதிசயம் பயப்பதாயிருத்தல் நோக்கி நுகரத்தக்கது.

(கை கழுத்து முகம் வாய் பல் மூக்கு இவைகளின் வருணனை)

[* ' "ஆசானுபாகு" வென முழங்தாள்வரை நீண்ட கைகளுக்கு ஐராவதமென்னும் யானையின் துதிக்கை ஒருசிறிது ஒப்பாகு மெனலாம். கழுத்துக்குத் திருமாலின் செங்கையில் தங்கும் சங்கையன்றி மற்றைச் சங்குகளையேனும் கமுகையேனும் உவமைகூறுதல் ஒண்ணாது. முகம் செந்தாமரைமலர்போலுமென்றால், அம் மலரோ உவமானமாங் கண்ணுக்கு வேறு உவமை யாது உளது? பூரணசந்திரன், தேய்தலுறுதலால், அது, என்றும் பூரணமான பொலிவோடு கூடிய முகத்துக்கு எதிராகமாட்டாது. அமிழ்தம்போல இனிய மொழிகளைக் கூறுதேபோனாலும் புன்னகை பூத்தலேனும் புரியாத பவளத்தை எவ்வாறு செவ்வாய்க்கு உவமையாகக் கூறலாம்? முத்துக்களோ, அமிழ்தத்திரள்களோ, † தருமவித்துக்களின் முளைகளோ, ‡ சத்தியவிருட்சத்தின் அரும்புகளோ, இத் தொகுதிகளுள் எத்தொகுதி பல்வரிசைக்கு ஏற்ற உவமையென்று பகர்வேன்? நீலரத்தினத்தின் ஒளிக்கொழுந்தும் மாகதமணியின் கிரணத்திரளும் போன்ற நிறமுடையதாகிச் சிவந்த அதரத்தை அடுத்துவிளங்கும் மூக்குக்குத் தம்பலப்பூச்சியைக் கௌவச்சார்ந்த பச்சோந்தி உவமையாதற்குப் போதாதெனில், வேறே உவமானங் கூறலொண்ணுமோ?']

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பிழை திருத்தம்

தொகுதி	பகுதி	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
XXXII	5	கஙஅ	சூ	நியதி; மரியாதை.	நியதி. தப்பு - மரியாதை.

---

* ஆசானுபாகு—முழங்தாளளவும் நீண்ட கையுடையோன்.

† ‡ தருமமும் சத்தியமும் வெண்ணிறமுடையவையெனல் மரபு.

ஸ்ரீ:

பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

கஙசு—ஆம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 28. (இடையியல் 4.) "கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென், றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே" என்பது சூத்திரம். இது மன்னென்னுமிடைச்சொல் பொருளுணர்த்துமாறு கூறுகின்றது.

இச்சூத்திரவுரையின் தொடக்கத்து, "என்னுதலிற்றோவெனின், இடைச்சொற்களை எழுவகையென விரித்தார்; அவற்றுள் மூன்றுவகை மேலேயுணர்த்தி ஒழிந்த நான்குவகையுந் தத்தங்குறிப்பிற் பொருள் செய்குநவற்றை விரிப்பான்றொடங்கினர்; அது கருத்து." என்று அச்சுப்புத்தகத்திற் காணும் வாக்கியத்திற் பிழையுளது. அதில் 'நான்குவகையும்' என்றிருப்பது 'நான்கு வகையுள்' என்று திருத்தப் பெறல்வேண்டும்.

இடைச்சொற்களை எழுவகையென விரித்தது இவ்வியலின் இரண்டாஞ் சூத்திரம். அவற்றுள் மூன்றுவகை: 'புணரியனிலையிடைப் பொருணிலைக்குதந, வினைசெயன்மருங்கிற் காலமொடுவருந, வேற்றுமைப்பொருள்வயி னுருபாகுந' என்று அங்குக் கூறப்பெற்றன. அவை மேல் எழுத்ததிகாரத்தினும் இவ்வதிகார முன்னைய இயல்களினும் ஓதி முடிக்கப்பட்டன. ஒழிந்த நான்குவகை: அசைநிலை, இசைநிறை, தத்தங்குறிப்பிற்பொருள்செய்குந, ஒப்பில்வழியாற்பொருள் செய்குந என்பனவாம். ஆகவே, தத்தங்குறிப்பிற் பொருள்செய்யுமிடைச்சொல்வகையை இந்நான்குவகையுள் ஒன்றெனலல்லது, நான்குவகையும் அதுவேயெனல் சிறிதும் இயலாது. ஆகையால் அச்சுப் பதிப்பின் தவறு மேற்கண்டவாறு திருத்தற்குரியதே.

அன்றியும் அவ்வாக்கியமுடிவில், 'அது கருத்து' என்று காணப் படும் சொற்றொடர் இயைபின்றிநிற்கின்றது. அதனை ஈண்டைக்குவேண்டாத மிகையென்று விலக்கிவிடலாம். அல்லது வாக்கியப் பொருளொடு பொருந்த வேறு எவ்வாறாயினும் மாற்றிக்கொள்ளல் நன்று. இது நிற்க.

இச்சூத்திரவுரையின் வரலாற்றுப்பகுதியில் மன்னைச்சொல் ஒழியிசைப்பொருளில்வருதற்கு, 'கூரியதோர் வாள்மன்' என்பதை எடுத்துக்காட்டி, அதன்பின், "இனி இற்றென்றானும்..........ஒருசொல்லை ஒழிவுபடவந்தமையின் ஒழியிசையென்பது" என்ற குறிப்புரையும் வரையப்பெற்றுள்ளது. இவ்வாக்யத்திற் சிதைவும் வழுவும் உண்மையால் அவற்றை ஆராய்ந்து திருத்தல்வேண்டும்.

"ஒழியிசை யெச்சம் ஒழியிசை முடிபின" (எச்சவியல் 36.) என்னுஞ் சூத்திரவுரையில் "கூரியதோர்வாள்மன்: வாய்கோடிற்று, இற்றது எனப் பின்னும் வாள்மேலே முடிபுசென்றது" என்று இவ்வாசிரியரே எழுதியுள்ளனர். அதுகொண்டு உய்த்துணர்வார்க்கு, இவ்விடத்தும் "இற்றது என்றானும் வாய்கோடிற்று என்றானும் ஒருசொல்லை ஒழிவுபடவந்தமையின் ஒழியிசையென்பது" என இளம்பூரணர் முன்னர் வரைந்திருந்த குறிப்புரைதானே ஏடெழுதினோர்பிழையால் அங்ஙனம் சிதைந்திட்டதென்று தெளிவாய் விளங்கிவிடும். ஆகையால் இதுவே இங்கு சுத்தபாடமென்றுகொள்ளச் சிறிதும் குறையின்றாம்.

பரிசோதனம் 29. (இடையியல் 9.) "தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே, யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே" என்பது சூத்திரம். இதன்பொருள் வெளிப்படை.

அச்சுப்புத்தகத்தில் இதன் வரலாறு, "தேற்றம்: அவனேகொண்டான்" என்று பதிக்கப்பட்டிருக்கிறது. 'அவனே எ கொண்டான்' என அஃது அளபெடைக்குறியெழுத்துப் பெறுதல் நன்று. ஏனெனில், "தெளிவி னேயுஞ் சிறப்பி னோவு, மளபி னெடுத்த விசைய வென்ப" (இடை. 13) என்பது இத்தொல்காப்பியரிட்ட கட்டளையாகும்.

இவ்வளபெடையினைப் பிற்காலத்தார் பெரிதுங் கையாண்டிலரெனினும், ஒருசார் பிரிநிலையேகாரத்தோடு தேற்றேகாரத்திடைப் பொருள் வேற்றுமை காணுதல் மிக நுண்ணுணர்வினோர்க்கல்லது இயலாமையின, அஃது எல்லார்க்கும் இனிதுவிளங்கத் தொல்லாசிரியர் இக் குறியீடு வேண்டினர்போலும்! ஆகலின் இம் மரபு பிறழாமற்போற்றல் மிகச் சிறக்கும்.

பரிசோதனம் 30. (இடையியல் 31) "யாகா, பிறபிறக் கரோபோ மாதென வரூஉ, மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி" என்பது சூத்திரம். இதன்பொருள், யாமுதலிய ஏழும் அசைநிலையிடைச்சொல் என்பதாம்.

உரையாசிரியர், "இச்சூத்திரம் அசைக்கும் இடைச்சொற்களைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று" என்றார். முன்னிலையசைச்சொல் முதலிய பிறவுமிருப்ப இவற்றை இங்கு அசைக்குஞ்சொல் என்றது வரைவின்றி மூவிடத்திற்கும் பொதுவாய் வேறுபொருளின்றி அசைத்தல்மாத்திரையேகருதிப்போலும்! இது நிற்க.

இவ் வேழு இடைச்சொற்களுள் 'மாது' அசைநிலையாதற்கு உதாரணங்காட்டிய உரைப்பகுதி, "விளிந்தன்று மாதவத் தெளிந்தவென் னெஞ்சம் என மாது வந்தவாறு" என்று அச்சுப்புத்தகத்திலும், "விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சம் என மாது வந்தவாறு" என்று பழஞ்சுவடியிலும் காணப்படுகின்றது. இவ்விருவேறு பாடங்களில் முன்னையது பிழை, பின்னையது திருத்தமுடைத்து.

ஏனெனில் அச்சுப்பிரதியில் 'மாது' என இடைச்சொல் பிரிந்து நிற்குங்கால் 'அவத்தெளிந்த' என எஞ்சியபகுதி பொருளின்றியொழிகின்றது. பழம்பிரதியில் அங்ஙனம் பிரிந்துநிற்குங்கால் 'அவர்த் தெளிந்த' என அது பொருளொடு பொருந்துகின்றது. அவர்த் தெளிந்த என் னெஞ்சம் விளிந்தன்று என முடித்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது 'மாது' அசைநிலையாய்விளங்கும்.

இம் மேற்கோட்பகுதி நற்றிணை 178-ஆம் செய்யுளைச் சார்ந்தது. அந்நூலின் பதிப்பாசிரியர் அதற்கு ஓர் உரையும் எழுதி வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தில், "விளிந்தன்று மாதவத் தெளிந்தவென் னெஞ்சே" என்ற மூலபாடமும், "முன்பு மிகத் தெளிந்திருந்த பெருமையுடைய என் நெஞ்சமானது இப்பொழுது அழிவுபொருந்தியதாயிற்று" என்ற பொழிப்புரையும், "மா—அசைச்சொல்" என்ற விசேடக்குறிப்பும் காணப்படுகின்றன. அவை அவ்விடத்தில் ஒருவாறு பொருந்துமெனக் கொள்ளலாமாயினும், அவ்வுரையாளர் இவ்விளம்பூரண மேற்கோளின் இலக்கணவியைபு நோக்கிலர் என்பது வெளிப்படை.

இளம்பூரணர்போலவே அவர்க்குப் பின்வந்த சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே" என இவ்விடத்து இதனையே மேற்கோளாக எடுத்தாண்டனர். ஆகையால் நற்றிணையடியின் சுத்தபாடம் இன்னதென்பது இதனாலும் வலியுறும்.

கோமளபுரம் இராஜகோபாலபிள்ளையவர்களின் சேனாவரையப்பதிப்பில் "விளிந்தன்று மாதவற் றெளிந்தவென் னெஞ்சே" என்ற பாடம் காணப்படுகின்றது. ஆயினும் அது குற்றமாகாது. ஏனெனில் அங்குத் தலைவனைக்குறிக்கும் அவர் என்ற பன்மை அவன் என ஒருமையாய் நிற்பதல்லது, மாது என அசைச்சொல் பிரிந்திசைப்பதில் தவறின்று. ஆறுமுகநாவலரவர்களின் சேனாவரையப்பதிப்பில் 'மாதவர்த்தெளிந்த' என இது முழுதும் பிழைபறப் பொறிக்கப்பட்டுள்ளது. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் சொல்லதிகார நச்சினார்க்கினியப்பதிப்பிலும் இம்மேற்கோள் வழுவின்றிவிளங்குகின்றது. ஆயினும், இவையெல்லாம் இங்ஙனமாதலோக்காது நற்றிணையச்சுப்புத்தகத்தின் பாடமே திருத்தமுடையதென மயங்கிச் சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்தார் தம் சேனாவரைய வெளியீட்டில் "மாதவத்தேளிந்த" என்று அச்சிட்டு இவ் விலக்கணமேற்கோளைப் பழுதுறுத்திவிட்டனர். இவ் விளம்பூரண அச்சுப்பிரதியும் மேற்காட்டியவாறு பழுதுற்றிருத்தலால் பழஞ்சுவடியிற்கண்ட "மாதவர்த்தேளிந்த" என்பதே சுத்தபாடமென முடிந்தது.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

மதிப்புரை.

நாடகவியல்:—இது, சென்னைக் கிறித்தவகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த வி. கோ சூரியநாராயணசாஸ்திரியார் பி. ஏ. இயற்றியது; இயலிசை நாடகமென்னும் மூன்று தமிழிலக்கணங்களில் மேலதாயுள்ள நாடகத்தமிழின் இலக்கணநூல்கள், காலகெதியால் மறைந்துபோனவற்றை இக்காலத்தவர் அறிதற்கியலாது; ஆயினும், அவ்விலக்கணமுறைகளைத் தமிழர்கள் ஒருசிறிதுணருமாறு சிலப்பதிகாரவுரை முதலிய சில தமிழ்நூல்களிலும் வடமொழி அங்கிலமொழிகளிலும் உள்ள பல நாடகவியல்புகளையும் மதிநுட்பத்தாற் றமக்குத் தோன்றிய இயல்புகளையும் கொண்டு முறைப்படுத்திச் சுத்தமான தமிழ் மொழியில் தெளிவான சூத்திரங்களால் யாக்கப்பெற்றது. இந்நூலியற்றியுதவிய சாஸ்திரியாரது உழைப்பு, ஊக்கம், தமிழபிமானம், கல்வித்திறமை முதலிய குணநலம் பாராட்டத்தக்கதே. இப்புத்தகம், அண்ணாமலைபல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமத். ந. பலராமையரவர்களால் நன்கு எழுதப்பட்ட பொழிப்புரை குறிப்புரைகளுடன் நூற்பொருளகராதி, சூத்திரமுதற்குறிப்பகராதி, மேற்கோட்செய்யுண்முதற்குறிப்பகராதிகளும் சேர்த்து நல்லகாகிதத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரியார்பேர்விளங்கும்படி இப்புத்தகத்தைப் பதிப்பித்துதவிய அவர்குமாரர் ஸ்ரீமான் வி. சூ. சுவாமிநாதையரின் நன்முயற்சி பாராட்டத்தக்கது. இதன்விலை ரூ. 1–8–0. வேண்டுவோர் வி. சூ. சுவாமிநாதையரவர்கள், புத்தகவியாபாரி, மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்.

சதாசிவமுனிவர்சரிதம்:—இந்நூல் சதாசிவப்ராம்மேந்த்ரர் சரித்ராமிர்தத்தைத் தமிழுலகம் பருகிக் களிகூருமாறு சீரிய செய்யுள்நடையில் வெளியிடுவது. புதுக்கோட்டை மஹாராஜா கலாசாலைத் தமிழாசிரியர் நா. கனகராஜையரவர்கள் இதன் ஆசிரியராவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பண்டிதபட்டமும் சென்னைச் சருவகலாசங்கத்து வித்துவான்பட்டமும் ஒருங்குபெற்ற அவர்களுடைய தமிழ்ப்புலமை இதனை இயற்றுதற்குத் தகுதிவாய்ந்ததே. மாட்சிமைதங்கிய புதுக்கோட்டைமஹாராஜா அவர்களுக்கு இஃது உரிமையாக்கப்பெற்ற சிறப்

புடையது. மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப் போசிரியர் ஸ்ரீ. S. சோமசுந்தரபாரதியாரவர்கள் முதலிய தமிழறிஞர்கள் இதனைப் பாராட்டியுள்ளனர். புதுக்கோட்டை ஜனமித்திரன்பத்திராசிரியர் ஸ்ரீமாந் P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் இந்நூலினைப் பதிப்பித்த நன்முயற்சி பாராட்டற்குரியது. இதன்விலை அணா 8. விலாசம்:—ஜனமித்திரன்காரியாலயம், வடக்குராஜவீதி, புதுக்கோட்டை.

(1) அருளிச்செயல் பாகவதம் (2) நூற்றெட்டுத்திருப்பதிக்கோவை:—இவற்றுள், அருளிச்செயல் பாகவதம் என்பது யாவரும் பாராயணம் செய்து பயனடையுமாறு கண்ணபிரான்சரிதத்தைச் சுருங்கவுரைப்பது. ஆழ்வார்களின் அருளிச்செயலான திருப்பாசுரங்களின் தொடர்கொண்டே முழுதும் இயைபுற இஃது அமைக்கப்பெற்றிருப்பதால் இதனை ஓதுகின்றவர்க்குத் திவ்யப்ரபந்தாநுஸந்தானபலனும் எளிதிற் கிடைப்பதாம். இம்முறையில் இதனை இயற்றி உபகரித்த ஸ்ரீமாந் சேட்லூர் ரங்கஸ்வாமி ஐயங்கார் M. A. அவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் மிக்க கடப்பாடுடையர். நிற்க. நூற்றெட்டுத்திருப்பதிக்கோவையென்பதும் ஆழ்வார்களின் பாசுரப்படியே வங்கிபுரத்தாய்ச்சி தொகுத்ததாம். இதனால் ஸ்ரீவைஷ்ணவதிவ்யதேசங்களின் பெயரும் பெருமையும் நன்குவிளங்கும். நித்யாநுஸந்தானம் செய்பவர்க்கு இதுவும் சிறந்த பயன்றாவல்லதே. இவை இரண்டும் ஒருசேர அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை அணா 1. விலாசம்:—ஸ்ரீ. V. வேங்கடகண்ணபிள்ளையவர்கள், மானேஜர், ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தபாடசாலை, 9 கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

வசன இரத்தினமிர்தம்:—இது தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்களால் எழுதப்பெற்றது. கடவுள், அன்பு, அறம், கல்வி என்னுங் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. மாணாக்கர் அறிவு வளர்ச்சிக்கும் வசனநடைப்பயிற்சிக்கும் இச்சிறுபுத்தகமும் ஓரளவு சாதனமாகலாம். இது ஆவினிப்பட்டி விவேகாநந்தர்கல்விக்கழகத்தால் வெளியிடப்பெற்றது. விலைவிவரம் வேண்டுவோர் ஷை கழகத்திற் றெரிந்துகொள்க.

சிவமயம்

முகவுரை

தேவாரம்

திருநாவுக்கரசு நாயனர்

திருச்சிற்றம்பலம்.

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனென்னை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றன்னையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.

திருச்சிற்றம்பலம்.

கோவை யென்பது தமிழ்ப்பிரபந்தங்களுள் அகப்பொருளுக்கு இலக்கியமாக அமைந்தது; அகப்பொருட்டுறைகளை ஒரு வரலாற்றுமுறையில் தொடர்புபெறக் கோத்து அமைத்து இயற்றப்பெற்ற நானூற்றின்மிக்க கலித்துறைகளையுடையது. பொதுவாகக் கோவையெனக் கூறப்பெறினும் அகப்பொருளமைதி உடைமையாலும், அப்பொருள் நிகழ்ச்சிக்குரிய ஐந்திணைநெறியமைதலாலும், நானூறுசெய்யுட்களுக்குக் குறையாமல் இருத்தலாலும் இவ்வகைப் பிரபந்தம் முறையே *அகப்பொருட்கோவை, †ஐந்திணைக்கோவை, ‡ நானூற்றுக்கோவையென வழங்கப்பெறும். மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்களும் தனித்தனியே முதலில் அமைய இயற்றப்படும் வருக்கக் கோவை யென்பதும், ஏதேனும் ஒருதுறையில் நூறு கலித்துறைகளாலேனும் அவற்றின் மிக்க கலித்துறைகளாலேனும் இயற்றப் படும் ஒருதுறைக்கோவை யென்பதும் கோவை விகற்பங்களாம்.

---

* சிதம்பரப்பாட்டியல், 30.

† "குலோத்துங்க சோழனைச் சொல்லிய வைந் திணைக்கோவை பாட" குலோத்துங்கசோழன் கோவை.

‡ "மஞ்சார் நானூற்றுக்கோவை" பிரபந்தத்திரட்டு.

மும்மணிக்கோவையென்பது யாப்புப்பற்றிக் கோக்கப்பெற்றதனாற் பெயர்பெற்றதுபோலப் பொருள்பற்றிக் கோக்கப்பெறுதலின் இப்பிரபந்தம் கோவையென்னும் பெயர்பெற்றது. அடைமொழியின்றிக் கோவையென்னும் பெயரால் இது வழங்கப்பெறுதல் இதன் சிறப்பைப் புலப்படுத்தும். இது பொருட்டொடர்நிலைச்செய்யுளின் பாற்படும்; சிறுகாப்பியவகையுள் இதுவும் ஒன்றாகும்.

எல்லாவகையாலும் சிறந்த தலைவன் ஒருவன் அங்ஙனமே சிறந்த தலைவி ஒருத்தியை ஊழின் வலியாற் கண்டு அன்பு பூண்டு இன்புற்று மணந்து இல்லறம் நடத்தும் * வாழ்க்கையை முறையே கூறும் அகப்பொருள்நிகழ்ச்சித்துறைகள் பலவற்றையும், அத்துறைகளைத் தம்பாற்கொண்ட கிளவிகளையும், அவற்றை உள்ளடக்கிய களவு கற்பு என்னும் கைகோள்களையும் சிற்றுறுப்புக்களாகவும் பேருறுப்புக்களாகவும் கொண்டது இவ்வகைப் பிரபந்தம். இதிற் கூறப்படும் நிகழ்ச்சிமுறை சிலகோவைகளில் விரிந்தும் சிலவற்றிற் குறைந்தும் சிலவற்றில் வேறுபட்டும் காணப்படும். ஒரு துறைக்கு ஒன்றுக்குமேற்பட்ட செய்யுட்கள் இருத்தலும் உண்டு. திருவாதவூரடிகள் இயற்றிய திருக்கோவையாரும், அம்பிகாபதிகோவையும், மதுரைக்கோவையும், திருப்பதிக்கோவையும், திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக்கோவையும் ஏனைய கோவைகளினின்றும் சில சில வேறுபாடுகளை உடையன. இறையனாரகப் பொருளுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பாண்டிக் கோவை மிக விரிந்த அமைப்பையுடையதென்று தோற்றுகின்றது. மற்றக்கோவைகளெல்லாம் பெரும்பாலும் தஞ்சைவாணன் கோவையை ஒத்து அமைந்துள்ளன.

பழைய நூலுரைகளிலிருந்து அறியப்படும் குமரசேனாசிரியர் கோவை, தமிழ் முத்தரையர்கோவை, காங்கேயன் நாலாயிரக்கோவை என்பனவும் இவ்வகைப் பிரபந்தங்களென்றே கருதப்படுகின்றன. அவற்றுள் காங்கேயன் நாலாயிரக்கோவை ஒவ்வொரு துறைக்கும் பப்பத்துச் செய்யுட்களாக அமைந்ததென்று ஊகிக்கப்படுகின்றது.

---

* இதன் விரிவை, சிவக்கொழுந்துதேசிகர்பிரபந்தங்களில் ஒன்றாகிய கோடீச்சுரக்கோவைக்கு எழுதப்பட்டுள்ள பொருட்டொடர்பிற் காணலாம்.

கோவைகளில் பாட்டுடைத்தலைவன், கிளவித்தலைவனென்னும் இருவர் கூறப்படுதல் மரபு. பாட்டுடைத்தலைவனின்றிப் பாடப்பட்டது அம்பிகாபதிகோவை ஒன்றே.

கோவைகளில் தமிழுக்குரிய ஐந்திலக்கணங்களும் நன்கு அமைவதற்குரிய வாய்ப்பு இருத்தலின் பெருங்கவிஞர்கள் இவற்றை இயற்றும் வாயிலாகத் தம் ஆற்றலை வெளிப்படுத்தினர். "யாவையும் பாடிக் கோவை பாடு" என்னும் பழமொழி இப்பிரபந்தம் நிறைந்தபுலமையுடையாராலே பாடத்தக்கதென்னும் உண்மையை வெளிப்படுத்துகின்றது. இக்கோவை பெரும்பாலும் அரசர்மேற் பாடப்படவேண்டுமென்றும் திணைமுதலிய பன்னிரண்டு உறுப்பையும்பெற்றிருக்கவேண்டுமென்றும் இதற்குரிய பரிசு இரண்டாயிரம் பொன்னென்றும் பிரபந்தத்திரட்டென்னும் இலக்கணநூலொன்று கூறும்.

கலைசைக்கோவை யென்னும் இந்நூல் தொண்டைநாட்டில் உள்ள * தொட்டிக்கலை யென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சிதம்பரேசரைப் பாட்டுடைத்தலைவராக வைத்து, திருவாவடுதுறையாதீனத்து வித்துவான் ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரால் இயற்றப்பெற்றது. கலைசை யென்பது தொட்டிக்கலை யென்பதன் மரூஉவாகும்.

இத்தலம் கலைசை, கலைசாபுரி, கோவிருந்தபுரமென்னும் பெயர்களால் வழங்கப்பெறும். இங்கே பண்டைக்காலத்தில் பசுக்கொட்டில்கள் மிகுதியாக இருந்தனவென்றும் அதனால் தொட்டிக்கலையென்னும் பெயர் உண்டாயிற்றென்றும் கூறுவர்; தொட்டி—பசுத்தொழுவிலுள்ள கழுநீர்த்தொட்டி. இங்கே இருந்த பழைய கோயிலானது இந்நூலிற் கூறப்படும் கேசவமுதலியார் வேதாசலமுதலியாரென்பவர்களுடைய முன்னோர்களால் மிகப் பெரிதாக அமைத்து நித்திய நைமித்திகங்கள் சிறப்புற நடத்தப்பெற்று வரலாயின. இக்காலத்தும் அவர்களுடைய பரம்பரையினரது மேற்பார்வையில் இக்கோயில் இருந்துவருகின்றது.

---

* சென்னபட்டணத்துக்குச் சமீபமாயுள்ள ஆவடி ஸ்டேஷனில் இறங்கி இவ்வூர்க்குச் செல்லவேண்டும்.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர்திருநாமம் செங்கழுநீர் விநாயகரென்பது. சிவபிரான் திருநாமம் சிதம்பரேசரென்பது. அம்பிகையின் திருநாமம் சிவகாமியம்மை யென்பது. இங்கே தியாகேசப்பெருமான் ஸந்நிதியும் உண்டு. இத்தலத்தில் பிரமதேவர் சிவபெருமானை வழிபட்டு அமிர்தகலசத்தைப் பெற்றனர். அதனால் அப்பெருமானுக்குக் கலசத்தியாகரென்னும் திருநாமம் வழங்கலாயிற்று. சிவபெருமான் ஒருகால் இங்கே நடனஞ்செய்தருளியதாக ஓர் ஐதிஹ்யமுண்டு. சிவகங்கையென்னும் தீர்த்தமொன்றும் திருவொற்றியூரிலுள்ளதைப்போல நந்தியோடை யென்னும் நீர்நிலையொன்றும் இங்கே உள்ளன. திருவொற்றியூரில் தியாகேசப்பெருமானுக்கு நடந்துவரும் விசேடங்களைப்போன்ற சிறப்புக்கள் இங்குள்ள மூர்த்திக்கும் நடைபெற்றன; வஸந்தோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றுவந்தது. இந்த ஸ்தல சம்பந்தமான செய்திகள் கர்ணபரம்பரையில் வந்தனவாகத் தெரிகின்றனவேயன்றி வேறுவகையாக அறியப்படவில்லை.

இந்நூலாசிரியராகிய ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரால் இத் தல சம்பந்தமாக இயற்றப்பெற்ற பிரபந்தங்கள் பல உண்டு. அவற்றையன்றி ஸ்ரீ சிவஞானமுனிவரால் இத்தலத்து விநாயகர்மீது இயற்றப்பெற்றதாகிய செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழென்னும் பிரபந்தம் ஒன்றும், சிவபிரான்மீது இயற்றப்பெற்றதாகிய சிதம்பரேசர் பதிற்றுப்பத்தந்தாதி யென்பதொன்றும், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய சிதம்பரேசர்மாலையென்பதொன்றும் தமிழ்நயந்தெரிந்து இன்புறுவோர்களுக்கு விருந்தாக விளங்குகின்றன.

கலைசைக்கோவையாகிய இது காப்புச்செய்யுளுள்பட 458 செய்யுட்கள் உடையது.

சற்றேறக்குறைய ஐம்பதுவருஷங்களுக்குமுன்பு இந்நூற்பிரதியொன்று திருவாவடுதுறையாதீனத்துப் புத்தகசாலையிலிருந்து எனக்குக் கிடைத்தது. உடனே இதைப் படித்து இன்புற்றுப் பிரதிசெய்து வைத்துக்கொண்டேன். பிறகு சோடசாவதானம் சுப்பராய செட்டியாரவர்களிடமிருந்த பிரதியோடும், திரிசிரபுரம் சி. தியாக

ராசசெட்டியாரவர்களிடமிருந்த பிரதியோடும் ஒப்பிட்டேன். பிற்காலத்தில் வேறுபிரதிகளின்உதவியும் கிடைத்தது.

என்னுடைய நண்பரும் வித்தியாவிநோதரும் தொட்டிக்கலைக் கேசவமுதலியாருடைய பரம்பரையினருக்கு உறவினருமான ராய் பகதூர் பூண்டி அரங்கநாத முதலியாரவர்களிடம் ஒருமுறை இந்நூலைப்பற்றிக்கூறிச் சில செய்யுட்களையும் சொல்லிக்காட்டினேன். அவர்கள் இதனைப் பதிப்பித்து வெளியிடவேண்டுமென்று விரும்பினார்கள். அவர்களுக்கு அவ் விருப்பம் இருந்தமை 1888–ஆம் ௵ ஜனவரி ௴ 26–ஆம் ௳ அவர்கள், கும்பகோணம் காலேஜ் புரொபஸராக இருந்த ஸ்ரீ சாது சேஷையா அவர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஒரு கடிதப்பகுதியாலும் வெளியாகின்றது; அதன் கருத்து வருமாறு:

* '...பண்டிதர் சாமிநாதையர் தம்மிடம் கலைசைக்கோவையின் பிரதி ஒன்று இருந்ததாகக் கூறினர். அந்நூல் அச்சில்வரும்படி செய்வதற்கும் அதை வெளியிடுதற்குரிய செலவை ஏற்றுக்கொள்ளுதற்கும் ஸித்தனாக இருக்கிறேனென்பதைத் தயைசெய்து அவருக்குச் சொல்லவேண்டும்.'

அக்காலத்தில் இந்நூலை வெளிப்படுத்தக்கூடவில்லை. இறைவன் திருவருளால் இப்பொழுதேனும் நிறைவேறியதுகுறித்து மகிழ்கின்றேன்.

இதனைச் செந்தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாக வெளிவரச் செய்த அப்பத்திரிகையின் ஆசிரியர்பாலும், இதனை ஆராயும்போதும் பதிப்பிக்கும்போதும் உடனிருந்து உதவிபுரிந்த சிரஞ்சீவி வித்வான் கி. வா. ஜகந்நாதையர் முதலிய அன்பர்கள்பாலும் நன்றியறிவுடையேன்.

'தியாகராஜவிலாஸம்'
திருவேட்டீசுவரம்பேட்டை
12—5—35

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

---

* '......Pandit Swaminatha Aiyer mentioned to me that he had a manuscript copy of கலைசைக்கோவை. Please tell him that I am ready to see it through the press and bear the cost of publishing it......'

ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர் வரலாறு.

பிறப்புமுதலியன.

இந்நூலாசிரியராகிய சுப்பிரமணியமுனிவர் சிதம்பரத்தைச் சார்ந்த காட்டுமன்னார்கோயிலில், ஸ்ரீ வீரநாராயணப்பெருமாள் கோயில் மேலைவீதியின் கீழ்சிறகிலுள்ளதொரு வீட்டிற் கார்காத்த வேளாளர்குலத்திற் பூநொடையார்கோத்திரத்திற்பிறந்தவர். சித்தாந்தசைவர்; துறவறம்பூண்டொழுகியவர்; முருகக்கடவுளை வழிபட்டு மந்திரஸித்திபெற்றவர். இவர் பிறந்தவருடமும் இவருடைய இல்லற வரலாறுகளும் இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும் விசுவாவசு ஸு சித்திரை மீ (சாலிவாகனசகாப்தம் கஎ0அ; கொல்லமாண்டு கூகூ0-கூகூக; கி. பி. 1786) பரிபூரணமான ஸ்ரீ சிவஞானமுனிவருடைய பிரிவை யாற்றாமல், "நினைத்தாற் சகிக்கப்போமோ" என்னும் கீர்த்தனையை இயற்றியிருப்பதோடு, ஆவினன்குடிப் பதிற்றுப்பத்தந்தாதியென்னும் பிரபந்தத்தை அக்காலத்துக்குப்பின் கீலக ஸு தை மாதத்தில் (கி. பி. 1789) அரங்கேற்றியதாகத் தெரிகின்றமையால் இவர் இற்றைக்கு 150 வருடங்களுக்குமுன் இருந்தவரென்பதுமட்டும் ஒருவாறு தெரிகின்றது.

வித்தியாகுரு.

இவர் சிவஞானபோதப் பேருரையின் ஆசிரியராகிய ஸ்ரீ சிவஞானமுனிவரிடம் தமிழ்மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்கள் பலவற்றையும் உரைநடைகளையும் சைவசித்தாந்த நூல்களையும் முறையே கற்றுப் பயின்று அவருடைய மாணாக்கர்களுள் ஒருவராகிச்செய்யுள்செய்தலினும் நல்லாற்றல் வாய்ந்தவராயினர். அவரிடம் இவருக்கிருந்த மெய்யன்பிற்கு எல்லையில்லை; அவர்மீது இவர் இயற்றிய "கருணைபொழி திருமுகத்தில்", "திண்ண வின்பச் சேவடியும்", "ஓதரிய வாய்மை" என்னும் செய்யுட்களும், அவர் பரிபூரணமானது தெரிந்து ஒருவாற்றானும் பிரிவாற்றாமல் வருந்தி இவரியற்றிய "நினைத்தாற் சகிக்கப்போமோ வென் சுவாமியை" என்னும் கீர்த்தனையும் இதனைப் புலப்படுத்தும். பின்னும்

அவருடைய பிரிவாற்ருத இவர், தொட்டிக்கலைச் சிதம்பரேசர் திருக்கோயிற் சந்நிதிமண்டபத்தில் அவருடையதிருவுருவத்தை அமைப்பித்து அதனை நாள்தோறும் போற்றி வழிபட்டுவந்தன ரென்றுஞ் சொல்லுவர்; இது மேற் குறிப்பித்த செய்யுட்களுள், "ஓதரியவாய்மை" என்பதிலுள்ள,

"அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுராடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே"

என்பதனல் தெரிகின்றது.

ஞானகுரு.

திருவாவடுதுறையாதீனத்தில் கஉ-ஆம் பட்டத்தில் இருந்த திருச்சிற்றம்பலதேசிகர்காலத்தில் சின்னப்பட்டத்தில் இருந்த அம்பலவாணதேசிகரிடத்து இவர் சைவசந்நியாசமும் சிவதீட்சையும் ஞானேபதேசமும் பெற்றவர். இவர் திருச்சிற்றம்பலதேசிகர்மீது சிந்து முதலியன செய்திருத்தலும், இவரியற்றிய நூல்கள் வரைந் துள்ள வெட்டுப்புஸ்தகங்கள் சிலவற்றில், 'திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை நமச்சிவாயகுரு மரபில் அம்பலவாணதேசிக ருடைய * ஞானபுத்திரனை சுப்பிரமணிய தம்பிரான் செய்தது இந்நூல்' என்று எழுதப்பட்டிருத்தலும் இதற்குத் தக்க சான்ருகும். திருச்சிற்றம்பலதேசிகர் எப்பொழுதும் சிவாகமஆராய்ச்சியையே செய்துவந்தாரென்றும், அதனல் அவர் செய்தற்குரிய காரியங்க ளிற் பெரும்பாலனவற்றை அவர்கட்டளையால் அம்பலவாணதேசிக ரே செய்துவந்தாரென்றும் கேள்வி உண்டு.

---

* ஞாஞசிரியரை ஞானபிதாவென்றலும் ஞானேபதேசம் பெற்றுக் கொண்டவரை ஞானபுத்திரரென்றலும் மரபு.

கல்விவளர்ச்சி.

திருவாவடுதுறையாதீனத்தில் தம்மைப்போன்றவர்களும் தமக்கு மேலானவர்களுமாக இருந்த பல கல்வியாளர்களோடு இடைவிடாதுபழகுதலும் மாணக்கர்களுக்குப் பாடஞ்சொல்லுத லும் பிரஸங்கம் செய்தலும் ஆகிய இவைகள் இவருக்கு வாய்த் திருந்தனவாதலால் இவருடைய புலமை மேன்மேலும் மாட்சிமை யுற்று விளங்கிற்று.

குணவிசேடங்கள்.

வித்தியாகுருவிடத்தும் ஞானசிரியரிடத்தும் சிறந்த மெய்யன் புடையவர் இவர். சிவபக்தி, அடியார்பக்தி, நன்றிமறவாமை, ஸ்தலயாத்திரைசெய்தலில்விருப்பம், தாம் கற்ற நூற்பொருள்களை உள்ளத்தில் நன்குபதித்துச் சமயம் வந்தபோது அழகுபெற அமைத்துப்பாடும் திறமை, எளியநடையிலும் வேறுபலவகை யிலும் விசித்திரமாகச் செய்யுளியற்றும் ஆற்றல், இசைப்பயிற்சி முதலியன இவர்பால் அமைந்திருந்தன. இவர் இயற்றிய செய்யுட்க ளால் இவை விளங்கும்.

சிறப்புப்பெயர்.

கேட்டவர் வியக்கும்வண்ணம் இனிய செய்யுள்செய்தலில் வல்லுநராயிருந்தமையின் இவர் மதுரகவி யென்று திருவாவடு துறையாதீனத்திற் சிறப்புப்பெயர்பெற்று விளங்கினர். தொட்டிக் கலையிற் பெரும்பாலும் இருந்தமையின் தொட்டிக்கலைச் சுப்பிர மணியமுனிவரெனவும் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய தம்பிரா னெனவும் இவர்பெயர் வழங்கும்.

இவர்காலத்திருந்த தமிழ்வித்துவான்கள்.

சிவஞானமுனிவருடைய மாணக்கர் பன்னிருவருள் இவர் ஒருவரென்று தெரிதலால் அம்முனிவரும் அவருடைய மற்ற மாணக்கர்களாகிய இலக்கணம் சிதம்பரநாதமுனிவர், கச்சியப்பமுனி வர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை, காஞ்சிபுரம் சரவணபத் தர் முதலியவர்களும், சென்னையில் ஸ்ரீகச்சியப்பமுனிவர் விநாயக

எகாதசருத்திரர் 1676
எகாதெசி 1690
எகாம்பரசம்பன் 1200
எகாம்பரநாதருலா பக். 661
எகாம்பரர் 1581
எகாலிப்பாவலன் பக். 609
எசுமத நிராகரணம் 1944
எடர் 1142
எடா 224
எடுகோடாகவெழுதல் 656
எணிமயக்கம் 484–5
எதில்பெண்ணீக்குதல் 242
எதுதிருட்டாந்தம் 2036
எப்பமிடுதல் 1795
எமார்தல் 567
எமிராவோரி 1615
எயென்னுமை 889
எர்வாழ்நர் 397, 400
எரகரம் 1702
எரண்டபுரம் 1798
எரணம் 2042
எரிக்கலிங்கு 1983–4
எரெழுபதுபாடிக் கம்பர் அரங்கேற்றி
எரோர்களவழி 2097 [யது 1596
எரோர்பெருமை 397–9
எலனவாருகர்த்தாக்கள் 1300
எலா 2004
எலாதி 2017
எவமாதி விக்ரமங்கள் 890
எழ்பொழில் 46
எழகநிலை பக். 575
எழகம்படுதல் 834
எழகமேறிப் போர்புரிதல் 716
எழகத்திய மாதவம் 140
எழடியழைத்தல் 1796
எழடிவரச்சொல்லல் 1797
எழிசைவல்லபி 799
எழிலார்கோ 1400
எழிற்குன்றம் பக். 618
எழிற்கோ 1400
எழுலகுமுடையாள் 799
எழூரர் பொய்யாமொழியுடன் தீப்புக்
எழெழுபேர் 1599 [கது 1459
எழெழுவர் 1372, 1449
எழையாளன் 1463
எழொன்பதின்மர் 1372
எற்றுரிமுரசம் 865
எற்றெதிர்தல் 889, 1092
எற்றெருமை வீரற்குவமை 543
எற்றெறிதல் 722
எறடர்த்தற்சிறப்பு 700
எறுடலாயர் 534
எறு அருகன்பக்கத்துண்மை 170;—
எறுகோள் 699–700 [இடியேறு 292
எறுதொழுவிடுதல் 700
எறுயர்கொடி பல்லவர்க்கு 181
எனக்கொடி 46
எனப்பொறி 899
ஏனுதிப்பட்டம் 455
ஏனையுவமம் 1552
ஐங்கணை 544
ஐங்கதித்தலைவன் - அருகன் 140
ஐங்குறுநூற்றுத்திணைகளபாடியவர் 2010
ஐஞ்சீரான்வந்த வெண்பா 1806
ஐந்ததிகாரம் 2082
ஐந்தரு 1356
ஐந்திணை 2017
ஐந்திரம் 1989
ஐந்துகுற்றம் 202
ஐந்துதமிழ்நாடு 638
ஐந்துவினைகள் 226
ஐந்நிறநறுமலர் 140
ஐந்நூல் 1533
ஐம்படை 15
ஐம்படைப்பருவம் 811
ஐம்பதம் 140
ஐம்புலன்களால் உயிரிழப்பன 386
ஐம்பொருள் 1819
ஐயந்தவிர்த்தபெருமாள் 1150
ஐயநம்பி 1051
ஐயம்பெருமாட் சிவந்தகவிராசன்
ஐயன் புகழேந்தி 1150 [1630
ஐயனர் 104
ஐயனரிதனர் 1563
ஐயாறதன்மிசை யெட்டுத்தலையிட்ட
ஐயாறு 1217 [கலை 1536
ஐவகைக்குலம் 140
ஐவகையாற் செல்வத்துக்கு வருங்
ஐவகை விழவு 140 [கேடுகள் 311

ஐவகைவினை பக். 538
ஐவகை வேள்வி 906
ஐவர் 866
ஐவர்க்கிடையோன் 760
ஒக்கூர் பக். 628
ஒக்கைகாவலன் 1547
ஒட்டக்கூத்தர் பக். 20. 821, 1471—84, 1641, 1643, 1682, 1704, 1804
ஒட்டர் 271
ஒட்டல்மகிபாலன் 782
ஒட்டப்பாடுதல் 813
ஒட்டவிஷயம் 782
ஒட்டியன் 1242
ஒட்டியான் 1638
ஒப்பத்திரேலை 1795
ஒப்பமிட்டநிருபம் 1797
ஒப்பனை - உமாதேவி 1659
ஒப்பித்தல் 1416
ஒப்பிலாதமழவன் 1258; பக். 607
ஒப்பிலாதி 1257
ஒப்பிலாமணித்தேசிகர் 1951
ஒப்பு - ஏற்றசெயல் 255
ஒப்புரவு 186, 188
ஒய்யெனல் 1428
ஒருகாம் பிருதலையும் பூ 1800
ஒருகையாற் பரிசுவாங்கல் 1796
ஒருங்கல் - ஓரங்கல் பக். 602
ஒருபதுமுகுந்தர் 1676
ஒருபொருட் கிருதுணிபு 140
ஒருமனம் 186
ஒருமைமனம் 897
ஒருவகம் (சைனர்க்குரிய மலை) 183
ஒருவந்தவுள்ளம் 336
ஒருவர்சோறுண்டார் செயல் 290
ஒல்லன் - பகைப்பன 2199
ஒலித்தல் - தழைத்தல் 725
ஒவிகற்றவர் 274
ஒழுகு—குழுவொழுகு 157
ஒளித்தபொருள் 1552
ஒளிப்பிழம்பு 227
ஒளிமண்டலம் அருகற்கு 140
ஒளியோன்காஞ்சி 1390
ஒளிவட்டம் 168
ஒற்கத்துதவல் 505
ஒற்றிமாநகர் 1901
ஒற்றியூர்க்காளி 1506
ஒற்றியூர் ஞானப்பிரகாசர் 1902
ஒன்பதுநிலைக்கோபுரம் 941
ஒன்பது வாயில் 307
ஒன்பது வேலி 1047
ஓங்கல் கடலாழமறிதல் 1800
ஓட்டந்து 444
ஓட்டாண்டி 1315
ஓட்டைச்செவி 1400
ஓடக்காரனைப் பாடிய கவி 527
ஓடாப்படையாண்மை 533
ஓடியமார்பன் 990
ஓடுபுறங்காணல் 896
ஓடைமழகளிறு 729
ஓடைமுதலியன 2179
ஓணன் விழுதல் - கேடு 1625
ஓத்திரெளவி 2096
ஓதத்தகாத நாட்கள் 358
ஓதலாந்தை 2010
ஓதாதுணர்ந்த போதன் 1947
ஓபளநாதன் 1124, 1574
ஓரங்கல்நாடு 1203
ஓரடிமுக்கால் (குறள்வெண்பா) 2000
ஓரம்போகி 2010
ஓரி 1401
ஓருயிர்க்கே புத்தர் உடம்பளித்தது 188
ஓலைப்பதிகம் 786
ஓலையில் எழுதல் 518, 1797
ஓவத்தன்ன வினைபுனை நல்லில் 584
ஓவியசாலை
ஔவையார் 221, 222, 226, 270, 282 - 5, 340, 396, 402, 408, 415, 416, 983, 991, 1400–21, 1803; பக். 279, 333, 343, 424, 502.
ஔவையாரும் பொய்யாமொழியாரும் பாடியபாட்டு 1454
ஔவையுங் காரைக்காலம்மையும் பாடியபாட்டு பக். 620
கஃகஃகெனல் 1424
கங்கக்குருசில் 1537

கங்கணக்கை 159
கங்கணகணகணவன் 1505
கங்க பல்லவ சோழ காலிங்க மாக தாதிகள் 892
கங்கபாடி 780, 786, 1047
கங்கபூமி 890
கங்கம் 2108
கங்கமண்டலம் 799
கங்கர் 811, 819
கங்கராசன் 889, 899; பக். 603
கங்கன் 786, 1143
கங்காகுலதிலகன் 1754
கங்காகேத்தன் 786
கங்காதரன் 783
கங்காநதி 1149
கங்காபுரமாளிகை 2118
கங்காபுரி 786
கங்காளன் 1407
கங்கை 571, 1237, 2155
கங்கை அருகனிருப்பிடத்துக்கு அயலில் உள்ளமை 170 [1594
கங்கை குடத்திலடங்கப் பாடியது
கங்கைகொண்டசோழபுரம் 2118
கங்கைகொண்டசோழன் 784
கங்கைசிறுவன் 754
கங்கைநதிகுலம் 1743
கங்கைநாடன் 1676
கங்கைநீர் மண் கொணர்ந்து திருக்குளம் எடுத்தல் 1122
கங்கைப்பதி 1134
கங்கை பரந்ததுபோல வீரர்பரவுதல்
கங்கைமணாளன் 883 [446
கங்கைமாநகர் 786
கங்கையாள் 862
கங்கையின் கொழுநன் 969
கங்கையைத் தலைத்துகிலாக உவமை
கச்சபேச்சரம் பக். 524 [39
கச்சாலை 75
கச்சி 511, 1671, 1677-8, 1805, 1843, 2104, 2127-32
கச்சிக்கச்சாலைக்கனி 76
கச்சிக் காமக் கோட்டம் 777 [2089
கச்சிக் கிடாம்பி வேதாந்த தேசிகன்
கச்சி கலிகெழுகடலொலியுடைமை46
கச்சிச் சபாநாயகர்கோயிற் சாஸனம்
கச்சிச்செல்வன் 1596 [பக். 273
கச்சித்திருமால் 29
கச்சித் திருவேகம்பம் 72
கச்சிநகர், கச்சி பார்க்க
கச்சி மாவின்கீழ்ச் சிவபிரான் 73
கச்சியப்பதேசிகன் 1977
கச்சியப்பமுனிவர் - சிவகதியடைந்த தினம் 1977-8;—விநாயகபுராணம் பாடிய காலம் 1976.
கச்சியப்பர் பக். 632
கச்சியப்பன் (வல்லை) 1156, 1383
கச்சியப்பனை உதைத்த புலவன்பாட்டு
கச்சியார்கோ சிங்கன் 971 [1647
கச்சியின் ஆறுவிசேடங்கள் 2133
கச்சியும் கடலும் உவமை 2128
கச்சி யேகாம்பரன் சம்பன் 1200
கச்சியை மயிலுருவமாகக்கூறல்2129
கச்சிவளநாடன் 982
கச்சிவீரப்பன் 1266 [112
கச்சினுல்விசித்த மருங்குல் காளிக்கு
கச்சென்னக் கனல்கின்ற கவின்முலை
கசடர் 288, 1337 [111
கசபதி 1047, 1284; பக். 606
கசவையம்மன்கோயில் பக். 613
கஞ்சத்தார் 1701
கஞ்சிகண்டது 779
கஞ்சி புற்கைகள் 1420
கஞலுதல் 112
கட்செவி 1133
கட்டக்குரைகடல் 1785
கட்டம் - மலம் 288
கட்டறுத்து வீடுபெறல் 351
கட்டி 1352, 1401
கட்டிடவேலைமுறை 1271
கட்டிமாணிக்கம் 1797 [- பாசம் 168
கட்டு - 'பதமெலாங் கட்டு'—1893;
கட்டுரையாம் பா 1478
கட்டுரேன்கிளை 1298
கட்டையிலே 1922
கடகம் - (ஊர்) 1242
கடகம் யானை 1206

கடத்தல்—வெல்லுதல் 892
கடந்தை 1235
கடம்பவனபுராணம் 1743
கடம்பைப் பரமானந்தபாரதி 1774
கடம்பைமாறன் 1145
கடல்கடைந் தமிர்தங்கொண்ட பாண்டியன் 892
கடல்கிழியவோடும் கலம் உவமை 758
கடல்பரந்து மேருச்சூழ்காலம் 480
கடலன்ன காமத்தர் 698
கடலையெறிந்த பாண்டியன் 895
கடவ திறை 906 [தது 597, 997
கடவுண் மானிடப்பெண்டிரை நயக்
கடவுளர்த முறங்காத கண்மலர்
கடவூர் உய்யவந்தான் 1892 [125
கடவூர் யமனை உதைத்த தலம் 88
கடற்கச்சி பக். 522
கடற்கரைச் சீனி 1783
கடற்கோடி 877
கடற்பட்டினம் 2167
கடற்பிறந்த தீயின் முருகன் மயிலிற்
றோன்றல் 100 [மை 124
கடற்பூத்த தாமரை சூரியனுக்கு உவ
கடற்றிரைவரவு தவறாது வருதல் -
கடன்மல்லைப் பூதத்தார் 1840 [296
கடன்மலைநாடு 799
கடனடுவிற் செந்தூளெழுப்பாடியது-
கடனடுவிற் போர் 382 [1601
கடனறிவாளர் 280
கடனாடு 151
கடாம் - மலைபடுகடாம் 2008
கடாரங்கொண்டசோழன் 784
கடாரத்தரசன் 782
கடாரம் 782, 907, 2108
கடாரர் 819
கடாவிடையறிதல் 370
கடிகை 854
கடிகைமுத்துப்புலவர் 1363
கடிகையார் 1621
கடிமிளைக் குண்டுகிடங்கு 478
கடுக்கக்குண்டலம் 1472
கடுக்கன் 1275
கடுகு பொடியாதல் 1339
கடுங்காற்று மழைகாட்டல் 1603
கடுங்கோ 615
கடுங்கோன் 604, 889, 1384
கடுஞ்சுரையான் 444
கடுஞ்சொல்லாகிய காரரவு 248
கடுநட்புப் பகைகாட்டல் 1603
கடும்பனியிற்கைபோர்வையாதல் 611
கடும்பு 585
கடுமுள்ளி பம்புதல் 495
கடுவிசையவுணர் 220
கடுவின்குணம் 2067
கடைச்சங்கத்தார் 1386
கடைச்சங்கம்—இரீஇயினோர் 1384;-
இருந்தோர்449;-இலக்கணம்1384
—காலம்1850;—வரலாறு 1384
கடைத்தலை 1745
கடைமணி 1474
கடையரான நாயனுர் 1872
கடையற் போர் 874 [169
கடையிலா—அறிவு—காட்சி—ஞானம்
கண்கள் இடனுடல் - தீக்குறி 1097
கண் குடங்கையளவாதல் 602
கண்சிவத்தல் 892
கண்சும்புளித்தல் 475
கண்ஞீடுதல் 995
கண்டக சோதனை 890
கண்டக நிஷ்டுரன் 889
கண்டகம் 1431
கண்டகோபாலன் 905
கண்டப்பய்யன் 783
கண்டமாலை 2150
கண்டரகண்டன் 1026
கண்டரவல்லவன் 1123
கண்டரன் 783
கண்டன் 575, 822, 823, 1039, 1136, 1479, 1488,
கண்டன் மாதவன் 1218—9
கண்டி 1459
கண்டியதேவன் 1225
கண்டியூர் 1457;—வண்ணுத்தி 1453
கண்டி யொன்பது 1205
கண்ணகி பாட்டு. பக். 620
கண்ணஞ்சாமை 1427

கண்ணபிரான் திருக்கோலம் 1278
கண்ணபுரந்தீத்தாள் 1613
கண்ணமங்கைத் தானத்தார் 1610
கண்ணன் - திருமால் 1;—பக். 517; —பாரிசாதங்கொணர்ந்தது 933
கண்ணனூர் 1018
கண்ணனூர்க் கொப்பம் 897
கண்ணாடிகாட்டுங் களிறு கனங்குறைதல் உவமை 285
கண்ணாடியிற் குன்றந்தோன்றல் உவமை 1432
கண்ணாணை 1335
கண்ணாத்தாள் - பக். 520
கண்ணார்கோயிற் புராணம் 1962
கண்ணாலவோலை 1407
கண்ணிலான் காட்சி 1672
கண்ணிலான் வீட்டுக்கெரித்தவிளக்கு 1642
கண்ணீர்மைசோர்வன 562
கண்ணுடையம்மை 114; பக். 503
கண்ணுடையாள் 2149
கண்பஞ்சாதல் - மரணக்குறி 1739
கண்படை 632
கண்படைநிலை 565
கண்பலி 598
கண்பார்க்கக் கையாலெழுதல் 408
கண்மூன்று - அருகற்கு 140
கண்வாழ்தல் 188
கணக்கர்சிரோமணி காரி பக். 365
கணக்காயர் 1384
கணங்கொண்டுண்டுதல் 220
கணபதி (அரசன்) 921
கணபதிமால் செம்மல் 1775
கணபுரத்தேவன் 1529
கணவதி 783
கணவதியார் 1122
கணவாளகுலம் 1349
கணவாளத்தொழில் பக். 613
கணவாளன் பக். 613
கணிகண்ணர்—பக். 9, 1815
கணிகற்றவர் 271
கணிதநூல் 2088
கணியார் 691
கணிவிளக்குதல் 1957
கத்திரியரைவர் 2141
கத்தூரி 1317, 1727—8
கத்தூரிமகன் கறுப்பன் 1729-30
கதக்கண்ணன் 1023-4
கதலித்தண்டுக்குக் கோடாலி நாணுதல் 1503.
கதலித்தோட்டத்துப் பித்தசாந்திக்காகப் புகுதல் 1490
கதவங்கொண்டு தொழுதல் 655
கதவுபடத்தெற்றுதல் 1649
கதழ்தல் 173, 441
கதித்தல் - ஒலித்தல் 512
கதி நான்கு 323
கதிர்காமப்பெருமாள் 103
கதிர்காமம் 102
கதிர்ப்பு 170
கதிரெதிர்வழங்காதுயர்வரை 1719
கதிரொளிமண்டலம் 140
கதுப்பு 112, 113
கந்தகோன் 1042
கந்தசாமிப்புலவர் 1741
கந்தப்பன் 1976
கந்தப்பிரான்கதை 1734
கந்தப்புராணம் கச்சியப்பர் 1677
கந்தர்விழாவிற் கனமழை பெய்யப்பாடிய கவி 1699
கந்தழி 2
கந்தன்சொல்வார்த்தை 1847
கந்தாரம்பாடுதல் 820
கந்தி 1549
கந்தியார் பக். 628
கந்தியார்கூற்று 2024
கந்தியார்வாக்கு பக். 473
கந்திருவம் 1247
கநகாரி - திருமால் 104
கப்பிஞ்சிநாடு 1657, பக். 636,
கப்புதல் 1639
கபாடந்திறத்தல் 1479
கபாடபுரம் 1384, 1479
கபாடவக்ஷஸ் பக். 624
கபாலம் 38
கபாலி 598
கபித்தாசுரன் பக். 518
கபிலக்கல் 1047
கபிலதேவநாயனார் பக். 526

கபிலர் 1047, 1384, 1395 2010, 2012—அடைக்கலப் பெண்ணை மலையற்கு உதவியது 1047;—பிறந்தபோதுபாடியது 1394 பக். 620
கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் பக் [620;
கம்பஞ்சோறு 1510
கம்பணவுடையார் 1237
கம்பணன் 1237
கம்பத்தடிகள் 1047
கம்பத்தடியிற் றவம் 2133
கம்பத்தான் 1574
கம்பநாடன் 1132, 1348, 2142
கம்பநாடாள்வான் 1516
கம்பர் 1048, 1049, 1134, 1140—2, 1241, 1495–1522, 1704, 2126;—இறந்தநாள் 1522;—காசுக்குப்பாடுதல் 1803;—காலம் பக். 626;—காவிரி பெருக்கடங்கப்பாடியது 2155;—சாஸனப்பாட்டு 1142;—சிவிகை பாண்டியன் தாங்கியது 1383, 1504;—சோழனுடன் கோபித்துச் சொன்னது 1509;—தெய்வவரத்தாற் பாடிய முதற்பாட்டு 1495;—பாண்டியனை நோக்கிப் பாடியது 1136;—மகன் 1507–8;—மரணகாலத்துப் பாடிய கவி 1513;—வாக்கு 20, 333, 1130—1; 1140, 1203, 1682; பக் 91, 261, 491, 493, 519;—விடந்தீரப் பாடியவை 1496—8;—விருத்தக் கவித்திறம்1804, 1981, 2013;—வெள்ளாட்டிபாட்டு பக். 625.
கம்பர்மேல்—சோழன் புலியை எவியது 1511;—வாணியன் தாதன் பாடிய வசை 1521.
கம்பர் வந்து துதிக்கின்ற நாடு 2149
கம்பராமாயணப் பாயிரச் செய்யுட்கள் 1514.
கம்பரைக் கொன்ற பழி சோழற்கு உண்டானது 1525.
கம்பரைச் சோழன் எய்தது 1512
கம்பன் - கம்பர் பார்க்க;—கருப்பூர் மன் 1053;—வீதி விடங்கன் 1047
கம்பலம் 100
கம்பளம் 1472
கம்பிலிநகர் 783
கம்பைநகர் 1761
கம்பையன் 1279, 1383
கம்மாளர் 271
கமகன் 362
கமலவூர்தி 2080
கமலை 1601, 1713, 1715, 1948
கமலை ஞானப்பிரகாசர் 1910—12 [1948
கமலையுலா 1680
கமுகின்பாளை முத்துச்சிந்துதல்2100
கயத்தாற்றுராசா 1686
கயல் சிலை புலிக்கொடி 15
கயல்பொறித்த வார்த்தை 1179
கயவர் 256, 286
கயற்கண்ணி 1659
கயாகரர் 1663
கயிரவத்துவர்வாய் 1824
கயிலாயமாலை 1772
கயிற்றுப்பாவை 721
கயிறியல்பாவை 443
கயிறு பல போரில் வீசுதல் 532
கயிறுபோட்டுப்பார்த்தல் 1566
கர்த்தாக்கள் 1300
கர்ப்பூரவிளக்கு 1067
கரகிரி 892 [977
கரங்கள் கற்பகமடைந்தன வெனல்
கரங் கால் குளிர்தல் (மரணக்குறி)—1739
கரசரண 1608
கரடம் 805
கரடிகைத் தொகுதி 1047
கரந்தை 437—49
கரந்தைகள் 1606
கரந்தைமறவர் 442
கரந்தை மீட்டல் 419
கரந்தையங்கண்ணியான் 448
கரபத்திரன் 782
கரவந்தபுரம் 890
கரவந்தவர்குலம் 899
கரன் 1515
கரிகால் 64

கரிகாலன் 775-9, 784, 2095;-கால் நெருப்புற்றது775;—காவிரிக்கரை கட்டியது 779, 2154;—முடிகவித்தது 779
கரிகாற்பெருவளத்தான் 777
கரி துரக பதாதி சங்கம் 892
கரிபோதல் 14, 125
கரு 1083
கருங்கணுடைவர் 1430
கருங்கலி 811, 906
கருங்கலிக்கனல் கெடுதலீ 907
கருங்களிற்றுழவன் 1047
கருங்கற்படை 1985
கருங்காலிக்கட்டை 1503
கருங்குளவி 281—2
கருங்கோழி மோசியார் 1384
கருங்கோன் 1031
கருடனே 939
கருடநூல் 2069
கருடன் 1817 [பறத்தல் 1465
கருடன் சென்ற விசும்பில் ஈயும்
கருடனை இடங்காணல் 1357
கருணமூலம் 2207
கருணன் 1435
கருணகரத்தொண்டைமான் 1057
கருணகரப்பெருமாள் பக். 520
கருணகரமூர்த்தி 20
கருணகரன் 1381, பக். 521
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்லல் (அவதானவகை) 1790
கருணைக்காகரம் 1712
கருணைப்பிரகாசர் 1933, 1944
கருணைமாமுகில் 1135
கருணைமேரு 1974
கருணையங்கடல் பக். 520
கருணைவேலி 1321
கருத்தமைதி 1544
கருந்தலை 1606
கருந்தலை பருந்தலைத்தல் 799
கருநடநூல் தமிழாக்கியது 1950
கருநடப்படை 1267
கருநடப்பேர்வெள்ளம் 1583
கருநடப்போர் 808—9
கருநடராசன் 897
கருநாடகன் 889
கருநாடர் 414
கருப்பாலை 1047
கருப்புக்கட்டி நீரோலை 1263
கருப்பூர்மன் 1059
கருப்பொருள் 1765
கரும்பிற் கணு நிகர்த்தல் 1941
கரும்பிறை 648
கரும்பின்வட்டு 1712
கரும்புறம் 1608
கரும்பைநகர் 1701
கரும மாராயன் 468
கருமலங்கு 2097
கருமாமணிவண்ணன் 1244
கருமாறிப் பாய்ச்சல் 2133
கருமுகில் நிகளம் பாண்டியனிடத்தது [897
கருவூர் 566
கருவூர்ச்சித்தர் பக். 427
கருவூரார் 602
கருவை 1659
கருவைத்தல் 1055
கரைக்குதிரை 1588
கரையேறவிட்டமுதல்வன் 1967
கல்சாத்துவித்தல் 1075
கல்நாட்டுதல் 736
கல்போதுத் தலைவர் 1785
கல்யாணபுரம் 1479
கல்யாணவரி பக். 598
கல்யாணி 1238
கல்லணிவகுத்தல் (அவதானவகை) [1795
கல்லாக்காளை 705
கல்லாடம் 1441-2
கல்லாடர் 1441-2;—தொல்காப்பியத்துக் குரையிட்டவர் 1384
கல்லாதவறிவு 170
கல்லாய்தல் 730
கல்லார் 357 [மை 264
கல்லார்க் கினியவுரைத்தல் அறியா
கல்லாலங் தண்ணிழற்கீழ்க் கல்வித்
கல்லாலம் 288 [துறைபயத்தல் 49
கல்லானை 924 [1932
கல்விடபங் கடலைதின்னப் பாடியது

கல்லின்மேல் தோன்றும் பவளக் கொடி உவமை 112
கல்லுங் கவணும் 1429
கல்லும் கவிசொல்லல் 120
கல்லுருகுங்காலங் கழுகறிதல் 1800
கல்லூர் 1282;-திருவிருந்தான் 1705
கல்லைப் பெண்ணாக்கியது 1291
கல்லையிலை 1758
கல்வி 351-6;—மனப்பழக்கத்தால் [ஆதல் 275
கல்விக்கடல் 1715
கல்விக்குத் திங்கள் உவமை 1530
கல்விக்கெல்லை 1712
கல்விகேள்வி 224
கல்விநலமிலாப்புலமை வீணுதல் 243
கல்விப்பிரவாகம் 1794
கல்வியானல்லன் காமாதியாற்றீயன் [301
கல்வெட்டுதல் 1123
கலகலெனல் 1879
கலமறுத்தல் 895
கலாகரன் 1247
கலாமுண்டாதல் 612
கலி-அப்தம்,—(16)--910; (3090)-778; (4558)-940; (4689)-958; (4820)—1949; (4911)—1799 (4647)-1954;(4869)-1957
கலி-கலித்தொகை2009,2012,2013
கலிக்கச்சி 29
கலிகன்றி 1830
கலிகெழுகடற்கச்சி 46
கலிகெழுகூடல் 995
கலிங்கத்துப்பரணி 1799
கலிங்கத்துப்போர் 803-7, 1057
கலிங்கபூமி 811
கலிங்கம் 907, 911, 1168, 1242, 2108-9;—ஏழு 799;—ஒட்டியன் இழந்தது 1242
கலிங்கர் 801, 819, 906
கலிங்கவேந்தர் 1484
கலிங்கன் 1047
கலிங்கு 1979, 1983-4
கலித்தொகை 1552;—திணை பாடியவர் 2012;—சிறப்பு-2013
கலிப்பகை 889
கலிப்பெருமாள் பக். 352
கலி பிலத்தொதுங்கல் 286
கலிமதனன் 883
கலிமல்லன் 1025
கலிமன்னன் பக். 240
கலியரைசன் 889, பக். 587
கலியன் 1863
கலியணை 1864
கலியாணசோமன் 1300
கலியாணத்தில் திண்ணை கெண்டை புரட்டியது 1620
கலியாறு வறத்தல் 799
கலியுகத்தில் வரு சகாத்தம் 1662
கலியுகம்—கலி பார்க்க
கலிவரலூழி 755
கலிவாயிலிற்கிடத்தல் 1310
கலுபா 1304
கலுழ்தல் 1429
கலைக்கடல் 1691
கலைக்குமரி 109 [நான்கு 1813
கலைகள்-அறுபத்துநாலு 117, 119;—
கலைசை 1974;—செங்கழுநீர்விநாயகர்பிள்ளைத்தமிழ் 1968
கலைமடந்தை 354
கலைமானேற்றூர்தி துர்க்கைக்கு 112
கலைமாமடவாள் கணவன் 155
கலை முப்பத்தெட்டு 1536
கலையெனப்பாய்ந்த மா 1430
கலைவஞ்சி 897
கலைவாணி 1441
கவசைநகர் 1348
கவட்டுமரத்திடுக்கிற் காலுழைத்துக் கொண்ட குரங்கு 1879
கவடி - கபடி 1642
கவடிவித்துதல் 906
கவண் 1429
கவந்தமாடல் 892
கவந்தன் 1515
கவருடைக்கழி 12
கவலைமறுகு 728
கவிக்களஞ்சியம் 1786
கவிக்களிறுகைத்தல் 1471
கவிகண்ணனூர் 1037

கச. வேழவருணனைச் சருக்கம்.

1457 அந்த மால்வரைப் புறத்துநின் றூர்த்தவன் வரலுஞ்
சந்த மால்வரைக் குணக்கணித் தாஞ்சல தியுட்கான்
முந்தை நாளையின் [1]மேருவான் கொடுமுடி மூன்றை
யிந்த மாநிலத் திட்டதென் னிலங்கையென் பதுமாய். (க)

1458 ஈழ மாமெனுந் தீவினு ளிருபிறை யிருகோட்டு
வேழ மால்வரை வடவைமா திரத்துடன் விள்ளாதாம்
வாழ்வ மைந்தனுான் றயன்மருத் தினைமக வெனவேவைத்
தாழ்ப யின்றுருத் துதித்ததோ ராசுவா [2]வுளதாமே. (உ)

இரண்டுந் தொடர்.

1459 உற்ப வித்திட விதித்தயாக் கையுளுதித் தறியாச்
சிற்ப மொன்றிலைச் செய்திடாத் தீவினை யிலையா
லற்ப மாயினு மறநிலை புரிந்ததன் றதன்பேர்
கற்பதும் பெரும் பாதக மெனுமுதற் கலையே. (ங)

1460 வடவை யைப்பொழி கண்ணொடு மிடித்தெழா வடவை
யிடவை யிற்பயி லினக்கரி காத்தவி னிபங்கள்
விடவை வாளெயிற் றாவட லாவிமேய் வெற்பி
னடவை யெங்கணு மதனையே தொடர்ந்துட னடக்கும். (ச)

1461 குயவ ரித்திரள் சிதறவே துதிக்கையாற் கொதிக்கும்
வெயர்வை யூதியு மினத்தினைத் திரட்டியும் விளித்தே
யுயர்வ றப்பரி சித்தலி னூதைநா தனெனும்
பெயரு மாங்கதற் கிடுகுறி யன்றெனப் பெறுமே. (ரு)

1462 நேத்தி ரங்கணு லிரண்டுளான் விசும்புதோய் நீலக்
கோத்தி ரங்களீ ரிரண்டினைக் குவவுசெய் திருள்சேர்
காத்தி ரத்துடன் பின்னிரண் டமைத்தகாட் சியெனு
நாத்தி ரம்பயில் புலவரும் புகழ்வர்கா ணங்கே. (சா)

1463 வேலை முற்றிய மேதினித் திசையென விரிந்த
நாலை நாழிகை நாவினிற் கழிகடு நடையால்
நூலை யுற்றுளா ரதனவா [3]முறுப்பினு ணோக்கிக்
காலை வன்கடுங் காலெனல் காரணக் குறியே. (எ)

[பி-ம்.] 1 மேருவின். 2 வுளதே. 3 முறுப்பினி ணேக்கி. சா.

1464 அஞ்ச னக்கிரி நாலையா தாரதூ ணமெனாச்
செஞ்ச வேநிரைத் தவற்றின்மே லகத்துவேய் சிவணா
மஞ்செ னப்புறம் பொலிதரக் கொடியுளாம் வரையைக்
குஞ்ச ரங்குட ரகடெனா வனைந்தனன் குரவன். (அ)

1465 துஞ்ச லின்றியே கங்குலுந் துழனிகூர் துவலைப்
புஞ்ச வெண்டிரைப் புணரிமொண் டெழுந்துவிட் புலஞ்சார்ந்
தெஞ்ச லின்றிமஞ் சுகள்துவ டனவிவர் தலிற்பார்
மஞ்செ னும்பெயர் மூதுகி லுக்குண்மையா மன்னோ. (கூ)

1466 கால தண்ட[1]மி தொன்றெனக் காவதம் பலவாங்
கோல மேதக வேசகத் துளைபல கொளுத்தித்
தூல மேயதோர் துடிப்பின உருவமே தோன்றத்
தால வட்டமென் றமைத்தனன் சதுமுகத் தச்சன். (க0)

1467 கூல வட்டம துடன்பொரு தெறிதிரை குழீஇய
வோல வட்டம துடைக்கட லொருங்குலாய் வளைக்கும்
ஞால வட்டம தகப்பட வளைக்குஞாற் சியதாற்
றால வட்டமுந் தாலவட் டமதெனத் தகுமே. (கக)

1468 இருத லைப்பரு வாயினாற் பகடிரண் டினைக்கவ்விப்
பருநி வான்புகும் புள்ளின்வாய்ப் பகடிரண் டையுமீட்டுக்
கருகு வான்செவி முறக்கடுங் காலினக் கடும்புள்ளைப்
பொருத லைப்படுத் துபுகொழித் தகழினுட் புகவுய்க்கும். (கஉ)

1469 முன்ன தாள்களிற் கிளைத்திடு மூலங்களை முகந்திட்டே
சொன்ன தாளம தெழுப்பிய செவியொலி சூர்தோய்ந்த
கொன்ன தாளரி செவிசெவி டுறப்புடை குறிநாடிற்
கன்ன தாளமென் றுரைப்பதுங் காரணக் குறியாமே. (கங)

1470 எதி யாமழு வேந்தினான் மத்தகத் தெழுகண்போற்
காதி னாருடற் கிறுதிகாண் கடைக்கன லுகலானா
லோதி னார்கடா மொருத்தலின் கட்கடை யுரைநூலு
ணீதி யானிரி யாணமென் [2]றிசைத்தது நெறியாமே. (கச)

[பி-ம்.] [1] மீதொன்றென. [2] றுரைத்தது. சா.

1471 எங்கும் வெண்டிரை யுண்டகார் நிகர்களிற் றினைக்கவ்வித்
தீங்கு செய்பற வையினல கிடந் துதேய்த் திடுமோண்பாற்
பாங்கு டைக்கரிப் பனைக்கையி னுதியினைப் பாவேந்த
ரோங்கு புட்கர மென்பது முண்மைசா லுரையாமே. (கரு)

1472 பொருப்பி னைச்சிலை குனித்துளான் பிறைகமும் பொருப்போங்க
விருப்பி னற்குடை கவித்துளான் சார்ங்கமாம் விறல்வில்லு
மிருப்ப வாங்கவற் றிணுக்குவ மைப்பட விணைவில்லை
மருப்பி ரண்டெனப் படைத்தனன் கஞ்சநாண் மலரோனே. ()

வேறு.

1473 ஒவிலா வானப் பிறைத்தவ ளத்தோ
டுறுபடை தருவதாய் நிழல்சார்
பூவினைக் கிளைத்து வடுப்படுத் தலொடு
பொருவிறற் பலனையெய் துதலாற்
பாவி னுட் புலவ ரொருமொழி பலவாய்ப்
பாப்பிய [1]பொருணிலை வகையான்
மாவினன் கொம்ப ரென்பது மருப்பை
மதித்திடிற் காரணக் குறியே. (கள)

1474 கடகரிக் காம்புட் காந்தலங் தோயக்
கவர்மருப் பிடையதா யதல்மேற்
சுடர்விரித் தெழுசெம் புகர்பாங் தனவாய்த்
தோன்றிய நிலைமைகோ ளரவம்
படர்நிலத் தினில்வா லூன்றுபு மதியைப்
பாழிவாய் பிறுங்கவே கவ்வி
யிடமலி சிரத்திற் குருமணித் திரள்க
ளெறிப்பவா னிமிர்ந்ததை பொருவும். (கஅ)

வேறு.

1475 நாலெ ளள்ளிடைக் திமிங்கிலங் திமிகெட நாலைக்
குாலி னுக்கெதி ரிபமிடிக் குலமெனக் குளிறப்
பாத கண்டமால் வரைகளுட் பனிப்பிறைத் துளைப்பல்
லாவு கோளிழைத் தடங்குவ படங்குவித் தலையுள். (ககூ)

[பி-ம்.] [1] பொருணினை, ச.

1476 வெறிம லர்ப்பொழிற் சால்வாய் வேழம்வி ழெனலாகுங்
குறியு டைக்கா நிமிர்ப்பநெட் டாவெனுங் கோட்பாட்டிற்
சிறிய யாவையும் பெரியதற் கிரையெனுந் திடனூற்றே
மறிய மால்வரை முழையினுண் மறையுமா சுணமன்னே. (உ0)

1477 மழைக்கு லம்புடை தவழ்ந்தபொன் வரைப்பிடர் வரிவண்டாய்ந்
திழைத்த தேனிருட் டினைவிசும் புறநிமிர்த் திகல்வேழம்
புழைக்கை யால்வளைத் தணவுதல் செக்கர்வான் புயன்மேலாய்த்
தழைத்த வெண்மதி தனையராத் தைவருந் தகைமானும். (உக)

1478 குழிந்த வான்சுனைக் குளிர்புனல் குடைந்தய விறையாவாங்
கிழிந்த தேனொடு முக்கனி களைநிறைத் திரைத்தோங்கி
வழிந்த தோர்நதி மடைக்குளாய்க் குளம்புகும் வகைமானப்
பிழிந்து நிஞ்சுபு வயிற்றினை நிறைக்குமப் பெருங்கைம்மா. ()

1479 வேச கத்துளை விண்ணிமிர் வருடைபை விரிவேலைத்
தூச கத்திடு நிலமிசைத் துடக்கிவீழ்த் துரிஞ்சோங்கற்
கீச கத்தழல் வெதுப்பலு மசனியிற் கிளைத்தோங்கும்
வாச கப்பகு வாயினுட் பசிதணி வதின்வைகும். (உங)

1480 துவள லைத்திரள் கொழித்தநித் திலத்[1]தொகு தியையும்
உவள கந்தொறு மிம்பருங் கவளமென் றுறல்போற்
றவள வெண்மதி யுறுப்பினை வெண்டயிர் தழீஇய
கவள மாமென வும்பரு நிமிர்ப்புபுட் காமே. (உச)

1481 தீவ கத்துள செம்பொன்மால் வரையினைச் செறிசாரற்
காவ கத்திடு கன்னலங் கழனிக ளொருநாளோர்
நாவ கத்திட னந்தலி னாலைசீந் துபுநாவற்
பூவ கத்துள கன்னலுந் தின்னுமப் பொருவேழம். (உரு)

1482 பொன்னெ டுங்கிரிச் சிகரமூன் றுமெனப் புவனஞ்
சொன்ன தீவெழு நூறெனு மோசனைத் தூர
முன்ன தாந்துதிக் கையினெடும் வானிமிர் முழையாற்
றன்ன தாமுடற் கோசனை நூறெனத் தாக்கும். (உசா)

[பி-ம்.] [1] தொழுதி ச.

வேறு.

1483 பீடுடைத் தனதி யாக்கை பெறுநிழற் பிறிதொன் றென்ன
[1]நீடிய நிரியா ணங்கா ணெருப்புறுத் தியபின் கூர்த்த
கோடுறக் குழிப்ப மேலாய்க் குறிகொள்வெள் ளத்தையும்பர்
சேடியுட் குன்றங் கீண்டு சேதுச்செய் தடைக்கு மன்றே. ()

1484 உட்காங் தையுறுக் கொற்றத் துறுபுலி யத்தி யாளி
யெட்காங் கெனவாழ் குன்றத் திபங்களி னெடுங்கை செந்தீக்
கட்கா டமத நால்வாய்க் களிற்றின்வான் புழைக்கைக் குற்ற
புட்காத் தினுக்கொப் பாகாப் புன்மையே யுடைய வாமே. (உஅ)

1485 கடகமால் யானை பாழிக் காநிமிர்த் திறைஞ்சும் வெள்ளை
வடகமாங் கன்ன தாள வாரண மருப்போர் நான்கும்
படகமா மெனவே யோதை பயின்மதக் காட நால்வாய்க்
குடகமால் வரையின் கூர்த்த கொம்பினேர் நுதிக்கொவ் வாவே.

1486 பாம்பெனத் திரண்டு மேனி பணைத்தகைந் நிமிர்த்து வெய்யோன்
வாம்பரி யிரதஞ் செல்லும் வழிதடுத் திகல்செய் யானை
யாம்பலந் தாத்து வைகு மலரியோ டிகலிற் றென்றே
தீம்பரு மிகழ்வ ரென்னுந் தேற்றத்தாற் றவிர்ந்த தன்றே. ()

1487 விண்ணிலம் புலியீ தென்ன வீதிசெல் வானை வேட்டை
மண்ணிலம் புலியை வென்றேன் மதியையும் வெல்வ லென்னாத்
துண்ணெனத் துதிக்கை நீட்டச் [2]சோதிமாய் முயற்கூ டென்னத்
திண்ணிதிற் கண்டு நாணிச் செருச்செய்யா தடங்கு மாதோ. ()

வேறு.

1488 ஞாலமேற் றிரண்ட வடிவொடு முகின்மே
னடந்துவெய் யவன்புலங் கடந்து
கோலமே தகவுங் கவர்த்தமூன் றெனலாங்
குவடுடைக் கொழும்பொனுங் குன்றைக்
காலனு மெனப் போர்க் கெதிர்பவர் குடரைக்
கலக்கியே குத்திநூக் குதற்குச்
சூலமா மெனவே கிளைத்தெடுத் தசைத்துச்
சுற்றியே வைத்தசூழ்ச் சியதே. (கூஉ)

[பி-ம்.] [1] நீடுடை. [2] சோதிமா முயற்கூ டென்னத். சா.

1489 சசலவெள் ளருவி யதனெடும் விசும்பைத்
தடவிநீண் டுருண்டகாஞ் சனமா
மசலமென் பவற்றை யிரக்கமொன் றிலா
லரக்கர்தா னவரென வறஞ்சார்
குசலவித் தையுடை யவரையு மிறைசெய்
குன்றெதி ரினுமுடல் குறைப்பான்
முசலமென் றொருகை தனிற்கிளைத் தசைத்து
முயன்றமைத் தனமுள பலவே. (௩௩)

1490 வெண்ணிலாத் தரங்கக் குண்டகழ்ப் புணரி
வீதிவா யுலாவருஞ் சோங்கிற்
குண்ணிலா யணுவாய் நீண்டகூம் பினுக்கா
முயர்வொடும் வியல்பதின் மடங்காய்க்
கண்ணுளார் கணித்தற் கரியதா மகக்காழ்
ககனமூ டுருவுசா தியினாற்
றிண்ணிதா யெறிவே லாமெனத் திருத்திச்
சேவகப் பொருப்பகத் தமைக்கும். (௩௪)

1491 ஈசனார் சடைபோற் சேந்துநீண் டனவா
யிருட்பிழம் பினைத்தெறுங் கதிரோன்
றேசமீ தோங்குஞ் சயிலமேற் படருஞ்
செம்பொனின் கொடிகளைத் திருத்திப்
பூசன்மேற் கொள்வார் முருட்டியாக் கைகளைப்
புற்றில்வா ழரவெனப் பிணிப்பான்
பாசமா மெனவே முதலொடுங் கிளைத்துப்
பற்றியே சுற்றிவைத் திடுமே. (௩௫)

வேறு.

1492 மாதி ரங்கமே னியிலிட மளித்துளான் வரைமானு
மாதி ரந்தனை யாதிய நேமிமால் வரைச்சாரன்
மாதி ரங்களோ ரெட்டினு மதமழை பொழிவாச
மாதி ரப்பொருப் பினுட்சுவ டுறியமா மதிக்கொள்வான். (௩௬)

1493 உருப்ப முற்றுள வுளத்து றுதறுகணிற் சிறுகண்ணு
னெருப்பு யிர்த்தலுங் காத்திரத் துடனிழ னிலைகூரு
மருப்பி ரண்டினுற் கிளைத்திடா வொருகையால் வளைத்தேந்திப்
பருப்ப தங்களை வாங்குபல் படிகளாய்ப் படைத்திட்டே. (கூஎ)

1494 உவந்த சேவகப் பொருப்பின்மே னிலத்துலாப் போத
நிவந்த மால்வரை நெரிதலி னெரிந்தயாக் கையொடுங்
கவந்த மாகிய வாளியா தியவுடல் காலுஞ்
சிவந்த சோரிக ணதிகளாய்த் திசைதொறுந் தெழிக்கும்.(கூஅ)

இவை மூன்றுந் தொடர்.

1495 நெரிந்தி டாமுனம் ஞெரேலெனக் கேசரி நிமிர்ந்தாங்கே
யிரிந்தி டாமுனஞ் சென்னியிற் கிரிபடிந் திடயாக்கை
பரிந்து மாதிர மெட்டினும் பரித்தலிற் படர்வானிற்
புரிந்த வீரசிங் காசன மானதப் பொற்குன்றே. (கூகூ)

1496 அம்பொன் மால்வரைப் புறத்திரி கரிகடா மகப்பட்டே
கொம்பர் மூன்னுறப் பின்னுற வென்றுறக் குளிர்சாரற்
றம்ப மாமெனத் திசைகளெட் டினும்பரித் தலின்வேலை
யிம்பர் சூழ்ந்துள நேமிவெற் புளதெனு மிடங்காட்டும். (சo)

1497 புலந்த டத்தகும் பழம்பகை யுறினுநோய் புணர்காலத்
துலந்த யாக்கைபோன் றுயிர்கடா முடனுறு மெனநூல்கள்
வலந்த துண்மையா மெனுந்திறங் காட்டுவ மதமாவிற்
கலந்து கேசரி பிறங்கலைப் பொறைபுரி கடன்மன்னே. (சக)

1498 தீங்கு வந்தொரு பதிக்குறிற் சிறந்துளா ரிடர்கூர்ந்துந்
தாங்கி மற்றுளா ரிடருறு திருத்துதண் ணளிமாணு
மோங்க லைக்கரி மடங்கலி னிடைந்துழும் பரிற்றுங்கி
யாங்க மைந்துள விடருறு தளித்ததண் ணளிமன்னே. (சஉ)

1499 ஆர்த்த தாங்கதன் மேனிலத் தாசுவா வதன்பின்
பார்த்த தெண்டிசைக் கடவுளர் நாலிரு பகட்டைக்
கூர்த்த வெண்பிறைக் கோடுகை கண்ணுறு கொடிறுள்
வேர்த்த தாமதங் குறித்தது கண்டதும் வெரினே. (சங)

1500 சீறு கின்றதென் புறக்கொடை புரிந்தவித் திரளை
மாறு [1]கொண்டெவன் மருப்பினு லெனவுறு மதங்க
ளாறு கொண்டவை குருதியாற் றொடுமேளா யவற்றை
யூறு கொண்டுவாக் கடலுவாக் கடலென வொலிக்கும். (சச)

1501 பெருவ ரைப்பிட ருலாவரு காலையிற் பிறிதொன்
றொருவர் வந்தெதி ரூன்றுத லின்றியுட் புழுங்கி
யருவி போன்றிழி மான்மதப் பெருக்கொடு மயலேய்
செருவின் மேற்படர் சிந்தைகூர்ந் தசனிபோற் றெழித்தே. ()

1502 இறங்கு காலையில் வரைநிமிர் தலுமிப மெதிர்முன்
மறங்கொள் கேசரி யிறந்திடா தடங்கின வரையுட்
புறங்கொ டாதெதிர் நின்றன புகர்முகப் புழைக்கை
முறங்கொ ணீள்செவிக் களிற்றினஞ் சேவக மூழைமுன். (சரு)

வேறு.

1503 பெருகுங்கவுள் வாய்மத நதிபொங்கிய தாலொலி
பெறநின் றதனு லுயர்வா
விருகண்டழல் வீசலின் மாழும்பிடர் மீதினி
விடுமண் படைமீ தெழலான்
மருதம்பொரு வாயது கடலும்பொரு வாயது
மலையும் பொருவா யதலாற்
பொருவெந்தழ லாலுயர் சுரமும்பொரு வாயது
புறவும் பொருவா யதுவே. (சஎ)

1504 பணகந்தன தாயிர பணபந்தியின் மேனிலை
பதிமண் படைவான் மிசையே
தினநுண்டுக ளாயெழ நடைகொண்டுகை யான்மலை
திரள்பந் தெனவா டலுறு
மனமென்பது பான்மிகு திசையெங்கணு மாதிர
மருளும் படிவீ தியுலா
யினமென்பன சூழொரு தனியங்கமொ டேயிரை
யினிதுண் டுழலூழ் வினையால். (சஅ)

---

 [1] கொண்டவன். சா.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

*1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 31 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.